வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.01.2022 சனிக்கிழமை | இதழ் : 27 | பக்கங்கள் : 16




## அரசியல் தீர்வை வென்றெடுக்க

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவை

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 01

“தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை வென்றெடுக்கத் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவையாகும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

15






வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

## தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகள் இன்றும் நாளையும் கூடிப்பேச முடிவு

கொழும்பு, ஜன. 01

தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகள் கூட்டாக செயல்படுதல், அரசியல் தீர்வு, இந்திய பிரதமருக்கான புதிய ஆவணம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இன்றும் நாளையும் மீண்டும் கூடிப் பேசவுள்ளனர்.

இந்தத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஈழநாடுவுக்கு உறுதி செய்தார்.

இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்காக தமிழ்

15

## 15 ஆயிரத்தை நெருங்கும் கொரோனா பலி

கொழும்பு, ஜன. 01

நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

கோவிட் - 19

15

## வடக்கு, கிழக்கு ஒருபோதும் மீண்டும் இணையமாட்டாது

### அடித்துக் கூறுகின்றார் தினேஷ்

கொழும்பு, ஜன. 01

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை எடுத்துக்காட்டி தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமருக்கு ஆவணம் அனுப்புவதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் மீண்டும் இணைக்க முடியாது. இதற்கு முஸ்லிம் மக்கள் அனுமதி வழங்க

15

## உ.கிழங்கு, பெரிய வெங்காயத்துக்கு அரசினால் இறக்குமதி வரி குறைப்பு

கொழும்பு, ஜன. 01

இன்று முதலாம் திகதி தொடக்கம் இறக்குமதி செய்யப்படும் உருளைகிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றுக்கான வரியை 30 ரூபாயால் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

15

## மலேரியா பரவல் குறித்து விழிப்பாக செயல்படுங்கள்!

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 01

இலங்கையை மலேரியா அற்ற நாடாக தொடர்ந்தும் பேணுவதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

15



உங்கள் நாளிதழுடன் இன்று இலவச வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டி. முகவரிடம் கேட்டு வாங்குங்கள்.

## இந்திய மீனவர்கள் அத்துமீறல்; மயிலிட்டியில் நேற்று போராட்டம்

### கொட்டும் மழையிலும் திரண்டனர்



யாழ்ப்பாணம், ஜன. 01

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக நேற்று போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

வலிகாமம் வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மயிலிட்டி கடற்றொழிலாளர்

15

## புதிய ஆண்டில் அரசை விரட்டியடிக்க அனைவரும் ஓரணியில் திரள்வோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்

கொழும்பு, ஜன. 01

“2022ஆம் ஆண்டு பல எதிர்பார்ப்புக்களுடன் பிறக்கின்றது. இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே ராஜபக்ஷ குடும்ப அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய

15

## இன்னுமோர் இனத்தின் நீதியான கோரிக்கையை நாங்கள் பறிக்கவில்லை!

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



மட்டக்களப்பு, ஜன. 01

எங்கள் அரசியல் அதிகாரத்தைக் கொண்டு இன்னுமோர் இனத்தின் நியாயமான, நீதியான எந்த கோரிக்கையையும் நாங்கள் தட்டிப்பறிக்கவில்லை. அதே போன்று எமது சமூகத்திற்கு தரவேண்டிய நீதியான, நியாயமான எந்தவொரு கோரிக்கையையும் விட்டுக்

15

## யாழ்ப்பாணத்தின் 3 தீவுகளை இந்தியாவுக்கு வழங்க திட்டம்

### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

யாழ்ப்பாணம், ஜன. 01

நெடுந்தீவு உள்ளிட்ட யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளை இந்தியாவுக்கு வழங்குவதற்கான தீவிர முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது

15

## 41 ஒமைக்ரோன் தொற்றாளர்கள்

கொழும்பு, ஜன. 01

இலங்கையில் மேலும் 41 ஒமைக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீஜெயவர்தன புர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்

15

# இப்படியும் நடக்கிறது...!

இங்கிலாந்தின் ஒரு பகுதி யோர்க்சயர். அங்குள்ள எல்லோருமே திறமைசாலிகள். அவர்களைப் பற்றி வழங்கும் துணுக்கு இது.

உழவன் ஒருவன் தன் குதிரையில் ஏர் பூட்டி உழுது கொண்டிருந்தான். திடீரென்று அந்தக் குதிரை இறந்து விட்டது. அதை அங்கேயே விட்டுவிட்டு ஐந்து மைல் தொலைவில் உள்ள தன் நண்பனின் வீட்டை அடைந்தான் அவன்.

நண்பனும் அவனை அன்புடன் வரவேற்றான். இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். புறப்படும் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்த அவன், “என்னிடம் அழகான பழுப்பு நிறக் குதிரை இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா?”, என்று கேட்டான்.

‘நன்றாகவே தெரியும் நல்ல குதிரை’, என்றான் நண்பன்.

‘அந்தக் குதிரைக்கு உன் வெள்ளைக் குதிரையை மாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்’, என்றான் அவன்.

‘மாற்றிக் கொள்ளலாம். உன் குதிரையின்மீது எனக்கும் ஒரு கண் உண்டு’, என்றான் நண்பன்.

‘பிறகு பேச்சு மாற மாட்டாயே’, என்று கேட்டான் அவன்.

“நீ பேச்சு மாறினால்தான் உண்டு”, என்று உறுதியுடன் சொன்னான் நண்பன்.

“அப்படியானால் நான் உண்மையைச் சொல்லி விடுகிறன். என் குதிரை இறந்து நான்கு மணி நேரம் ஆகிறது”, என்றான் அவன்.

‘அதனால் என்ன? என் குதிரை இறந்து பத்து நாள் ஆகிறது. அதன் தோலைத் தோட்டத்தில் காய வைத்திருக்கிறேன்’, என்றான் நண்பன்.

இந்தக் கதைதான் அந்தச் செய்தியை அறிந்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

கொழும்பிலிருந்து தென்னிலங்கையைச் சேர்ந்த இளம் அரசியல்வாதி நண்பர் ஒருவர் நீண்டகாலத்திற்கு பின்னர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

அவ்வப்போது யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் அவருக்கு உண்டு.

ஐக்கிய மக்கள் சக்தியில் இடம்பெற்றுள்ள முக்கிய கட்சி ஒன்றின் இளம் தலைவர்களில் ஒருவர் அவர். அவர் யாழ்ப்பாண விடயங்களை என்னிடமிருந்து தெரிந்து கொண்ட பின்னர், தெற்கில் என்ன நடக்கின்றது என்று கேட்டேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்துடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து சில நாட்களுக்கு முன்னர் செய்தி வெளியாகியிருந்தது.

அந்தச் செய்தி வெளியாகிய உடனேயே ரணில், “மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் ஏறுவதற்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை”, என்று அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அத்தோடு அந்தச் செய்தியும் முடிந்து விட்டது. ஆனால், அந்த விவகாரம் இப்போதும் புகைந்து கொண்டுதான் இருக்கிறதாம்.

மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாயிரத்து ஐந்தில் ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சிலரை இழுத்தெடுத்தார்.

கரு ஜெயசூரிய தலைமையில் இருபதுக்கும் அதிகமான ஐ. தே. க. எம். பிக்கள் மஹிந்தருடன் இணைந்து இருந்ததுபோல, ரணில் தலைமையில் ஒரு பத்துப் பேராவது எதிரணியிலிருந்து வந்தால், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தான் தயாராக இருப்பதாகவும், அப்படி வந்தால் ரணிலுக்கு நிதி அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்றும் மஹிந்த தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

ரணில் அதனை உடனடியாகவே மறுத்துவிட்ட போதிலும், அவரோடு இருப்பவர்களில் கட்சித் தவிசாளரான வஜிர அபேவர்த்தன போன்றவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ரணில் தனது ‘திறமையை’ நாட்டு மக்களுக்கு மீண்டும் நிருபிப்பதன்மூலம் கட்சியை மீண்டும் தூக்கி நிமிர்த்தலாம் என்று ரணிலுக்கு நெருக்குவாரம் கொடுக்கிறார்களாம்.

அதற்காக சஜித் அணியிலிருந்து சிலரை இழுத்தெடுக்கவும் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்களாம்.

இந்தத் தகவலைச் சொன்ன அந்த நண்பர், பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்றார்.

இங்கிலாந்தின் அந்த யோர்க்சயர் நண்பர்கள் இருவர் தத்தமது குதிரையை மாற்றுவதற்கு முன்றது போல, ஆளை ஆள் வென்றவர்களான மஹிந்தரும் ரணிலும் என்ன செய்கிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

## தென்கிழக்கு பல்கலை. பொது பட்டமளிப்பு

*ஒலுவில், ஜன. 01*

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 14ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழா நிகழ்வுகள், பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், நான்கு நாள்களுக்கு ஐந்து அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

முதல் அமர்வில் பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 474 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இரண்டாம் நாள் அமர்வில் கலை, கலாசார பீடத்தைச் சேர்ந்த 566 மாணவர்களும் மூன்றாம் நாள் அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 642 மாணவர்களும் தமது பட்டங்களைப் பெறவுள்ளனர்.

நான்காவது அமர்வில் முகாமைத்துவ - வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 619 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ - வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 312 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொலிஸ் சேவைக்கு ஆள்கள் இணைப்பு!

*மட்டக்களப்பு, ஜன. 01*

பொலிஸ் திணைக்களத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை நேற்று மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரியில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் சேவையில் கடமையாற்றுவதற்காக இலங்கை பொலிஸ் ஆட்சேர்ப்பு திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பங்கள்கோரப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பித்த 250 பேரில் 172 தமிழர்களும் 53 முஸ்லிம்களும் 25 சிங்களவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் கல்லூரி பொறுப்பதிகாரி கே. ரவிச்சந்திரன் ஒழுங்கமைப்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ. டி. எம். ரஹீம் சந்திரபால தலைமையில் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## விசேட கலந்துரையாடல்

*மட்டக்களப்பு, ஜன. 01*

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்களிடையே ஐக்கியத்தையும் சமாதானத்தையும் சர்வமதத்தின் ஊடாக கட்டியெழுப்பும் வகையிலான விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு தன்னாமுனை மியானி தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் சிவில் அமையத்தின் ஏற்பாட்டில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தில் இனங்களிடையே ஒன்றுபட்ட நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**01.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**01.01.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
01.01.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# 2022

தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தில், இந்த ஆண்டிலாவது ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமா? ஒவ்வோர் ஆண்டும் புதிதாக ஆரம்பிக்கும் போது, இப்படியானதொரு கேள்வியுடன்தான் - ஆண்டு ஆரம்பிக்கின்றது. ஒரு காலத்தில் அடுத்த பொங்கலுக்கு தமிழீழம் என்னும் சுலோகத்துடன் ஆரம்பித்த தமிழரின் அரசியல் பயணம், ஒவ்வோர் ஆண்டு முடிவிலும் ஏமாற்றத்துடனும், அவநம்பிக்கையுடனுமே முடிகின்றது. 2009இற்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருடங்கள் இப்படித்தான் கழிந்திருக்கின்றன.

பல விடயங்கள் நடந்திருக்கின்றன - பல விடயங்கள் பற்றி பேசப்பட்டிருக்கின்றன -இராஜதந்திரிகள் வந்து போயிருக்கின்றனர். எமது பக்கத்திலும் பல பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. புலம்பெயர் தேசங்களில் வாழும் நமது உறவுகளும் தங்களுக்கு தெரிந்ததை செய்திருக்கின்றனர். ஆனாலும், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எதுவும் நிகழவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் எந்தவொரு முன்னேற்றங்களும் இடம் பெறவில்லை. ஒரு முயற்சியின் வெற்றியென்பது , அதன் விளைவுகளைக் கொண்டுதான் மதிப்பிடப்படும். விளைவுகளைத் தராத முயற்சிகள் தொடர்பில் பெருமைப்பட்டுக் கொள்ள எதுவுமில்லை.

எந்தவொரு பெருமையுமின்றி 2021, முன்னைய ஆண்டுகள் போலவே, நம்மை விட்டு நீங்கிச் செல்கின்றது. மீண்டும் நம்பிக்கையுடனும், புதிய எதிர்பார்ப்புக்களுடனும் 2022 ஆரம்பிக்கின்றது. இந்த ஆண்டிலாவது ஏதாவது மாற்றங்கள் நிகழுமா? அந்த மாற்றங்கள் ஏதாவது நன்மைகளை தமிழர் வாழ்வில் ஏற்படுத்துமா? இந்த கேள்விகளுக்கு எவராலும் பதிலளிக்க முடியாது. எங்களிடமும் பதில் இல்லை. ஏனெனில், அரசியல் என்பது சாத்தியங்களை கையாளும் கலை என்பார்கள். அது முற்றிலும் சரியான கூற்றுத்தான். நாம் நடக்கலாம் என்று கணிப்பது நடக்காமல் போகலாம் - நடக்காதென்று வாதிடுவது நடக்கலாம். ஏனெனில், நிலைமைகள் மாறுகின்றபோது, அதற்கேற்ப அரசியல் சூழலும் மாறிவிடலாம். இவ்வாறு மாற்றமுறும் சூழ்நிலையை கையாளுவதே அரசியல் தலைவர்களின் பணி. அந்தப் பணியை அவர்கள் சரியாக செய்கின்றனரா என்பதில்தான் அரசியலின் வெற்றி தங்கியிருக்கின்றது.

ஒவ்வோர் ஆண்டும் கழிந்து செல்கின்றபோது, அந்த ஆண்டின், அரசியல் படிப்பினைகளிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால், நாம் அவ்வாறு கற்றுக் கொள்கின்றோமா?- நிச்சயமாக இல்லை. தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளாதபோது, மீண்டும் அதே தவறுகளே நிகழ்கின்றன. கடந்த பன்னிரெண்டு வருடங்களில் - ஒவ்வோர் ஆண்டுகள் நம்மைவிட்டு செல்கின்றபோதும், அந்த ஆண்டின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளும் துணிச்சலும் அர்பணிப்பும் நமது அரசியல்வாதிகளிடம் இருந்திருந்தால் இப்படியொரு தலையங்கம் தேவைப்பட்டிருக்காது.

போனவைகள் போனவைகள்தான். ஒப்பாரி வைப்பதால் கழிந்து சென்ற வாய்ப்புக்களை மீளவும் அடைய முடியாது. இந்த ஆண்டில், புதிய வாய்ப்புக்கள் கிடைக்கின்றபோது, அதனையாவது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவேளை வாய்ப்புக் கிடைக்காவிட்டால், வாய்ப்புக்கள் கிடைக்கும் வரையில், அரசியலை உயிர்ப்போடு வைத்திருப்பதற்கான உபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

இந்த மாதம் அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மீண்டும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணையவுள்ளது. ஒபாமா காலத்தில் இலங்கை மனித உரிமைகள் விடயத்தில் அமெரிக்கா காண்பித்த நேரடி ஈடுபாடு மீளவும் இடம்பெறவுள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் மீளவும் உலகம் கூடுதலாக உற்று நோக்கலாம். இலங்கையின்மீது, மனித உரிமைகள் சார்ந்து, கூடுதல் கரிசனை ஏற்படத்தான் போகின்றது. அடுத்தது, இந்தியா தொடர்பானது. ஏற்கனவே கலந்துரையாடலில் இருக்கின்ற தமிழ் கட்சிகளின் கூட்டுக் கோரிக்கை திட்டமிட்டவாறு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டால், அது இந்த ஆண்டின் மிக முக்கியமான தமிழ் அரசியல் நகர்வாக இருக்கும். இவை இரண்டும் தமிழர் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும். இதனை உச்சளவில் தமிழ் தேசிய தரப்புக்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றன? அவர்களால் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? இல்லாவிட்டால், வழமைபோல் மீளவும் சாதாரணமாக - காலம் நம்மை கடந்து செல்லுமா? 2022 -நிச்சயம் இவற்றுக்கான சாட்சியாக இருக்கும்.

# DAN - 21

## அனந்த பாலகிட்ணர்

*இன்றும்கூட பசுமையாக இருக்கின்றது ஈழநாடு பத்திரிகை காரியாலயத்தில் கழித்த நாட்கள். 1981ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்தில் ஒரு பத்திரிகையாளனாக சேர்ந்தபோது அங்கே நான் பத்திரிகைத்துறை குறித்து பெற்ற அறிவும், அனுபவங்களும் அபரிமிதமானவை.*

*இன்று ஈழநாடு பத்திரிகையை நீண்ட காலத்துக்குப் பின்னர் மீளவும் அதற்கேயுரிய மாண்புடனும், கௌரவத்துடனும் வெளிக்கொணர வைத்த பெருமை எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஊடகத்துறை சகோதரர் எஸ். எஸ். குகநாதனையே சாரும்.*

*நாமிருவரும் ஈழநாடு பத்திரிகையில் ஏறத்தாழ ஒரே காலப்பகுதியில் சேர்ந்திருந்தோம். ஈழநாடு குடும்பத்தில் என்னைவிட ஓரிரு வருடங்கள் மூத்தவர் எஸ். எஸ். குகநாதன். இருந்தபோதிலும் அவரின் ஊடகத்துறை சார்ந்த ஆளுமை மிக அபரிமிதமாகவே காணப்பட்டிருந்தது.*

*நாம் பணியாற்ற ஆரம்பித்த காலப்பகுதி ஈழநாடு பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டாகும். அப்போது எமது பதில் ஆசிரியராக இருந்த பி. எஸ். பெருமாள் ஈழநாடு நாளிதழின் ஒரு விசேட சிறப்பிதழை வெள்ளி விழா மலராக வெளியிட்டிருந்தார். அதில், ஈழநாடுவில் எமக்கு மூத்தோராக இருந்த ஆசிரியர்கள் மற்றும் ஈழநாடுவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தோரின் கட்டுரைகள் வெளியாகியிருந்தன.*

*ஈழநாடு இளநிலை பத்திரிகையாளர்கள் என்ற வகையில் எனது மற்றும் குகநாதனின் பெயர்கள் மட்டுமே அச்சிறப்பிதழில் பிரசுரமாகியிருந்தன. இருந்தபோதிலும் குகநாதன் சலித்துப் போய்விடவில்லை. தமது செலவிலேயே அழகிய சிறிய நூல் வடிவில் ஈழநாடு வெள்ளி விழா சிறப்பிதழைக் குகநாதன் கொண்டுவந்திருந்தார். அச்சிறப்பு நூலுக்கு என்னையும் கட்டுரை ஒன்றை எழுத வைத்ததோடு பல ஈழநாடு அபிமானிகளின் கட்டுரைகளையும் அதில் இடம்பெற வைத்தார்.*

*ஈழநாடு பத்திரிகையின் வெள்ளி விழா மலராக நூல் வடிவில் வந்த குகநாதனின் சிறப்பிதழ் குறித்து ஈழநாடு ஸ்தாபகர் பெரியவர் கே. சி. தங்கராசாவுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் அந்த சிறப்பிதழை பாரக்க ஆர்வம் கொண்ட நிலையில் குகநாதனும், நானும் அதன் ஒரு பிரதியை பெரியவரிடம் கொண்டு சென்று கையளித்தோம். அவர் அதனைப் பார்த்து அகமகிழ்ந்தது இன்றும் எனது மனதில் நிழலாடுகின்றது. அவர் அன்று ஆங்கிலத்தில், "இன்னொரு வடிவில் ஈழநாடு வெள்ளி விழாவை சிறப்பித்துள்ளீர்கள்", என்று குறிப்பிட்டார்.*

*1998ஆம் ஆண்டு 'சண்டே ஒப்சேவர்'* (Sunday Observer) *பத்திரிகையில் பணிபுரிந்த காலம். நோர்வே அரசின் ஒரு மாத கால புலமைப்பரிசிலை நிறைவு செய்து லண்டன் வாயிலாக பிரான்ஸின் பாரிஸூக்கு வந்திருந்தேன். அப்போது பாரிஸூக்கு ரயில் மூலமாக வந்தடைந்த என்னை, ஓர் அழகிய* Mercedes Benz *காரில் இளவரசி டயானா கொல்லப்பட்ட அந்த சுரங்கப்பாதை வழியாகவும் தனது வீட்டுக்கு அழைத்துச்சென்ற அந்த கம்பீரமான உருவத்தை திரும்பிப்பார்க்கிறேன்.*

*ஈழநாடு பத்திரிகையில் இரவு நேரக்கடமையை முடித்தபின்னர் அருகருகே ஆசிரியர் பீட மேசைகளில் படுத்துறங்கிய எஸ். எஸ். குகநாதன் அந்த கம்பீரமான* Mercedes Benz *காரை ஓட்டிச்சென்றதைப் பார்த்தபோது அவரின் ஊடகத்துறை ஆளுமை எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கின்றது என்பதை என்னால் உணர முடிந்திருந்தது.*

*என்னை ஏற்றிச்சென்ற அந்த கம்பீரமான கார், நேராகவே பாரிஸின் ஒதுக்குப்புறமொன்றில் அமைந்திருந்த குகநாதனின் தொலைக்காட்சி நிலையத்துக்குள் நுழைந்தது. அங்கே என்னை ஒரு சிறிய பேட்டி தருமாறு குகநாதன் கேட்டபோது எனது கண்களில் கண்ணீர் மல்க ஆரம்பித்தது.*


*ஏனெனில், ஈழநாடுவில் ஒரு பத்திரிகையாளனாக என்னோடு பணியிலமர்ந்து பின்னர் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தையும் ஐரோப்பாவில் முதலாவது தமிழ் தொலைக்காட்சி நிறுவனமாக ஆரம்பித்த குகநாதனின் ஆளுமை என்னை மெய்சிலிர்க்க வைத்திருந்தது.*

*அப்பேட்டி நிறைவடைந்ததும் காலம் கனியும்போது யாழ்ப்பாணத்தில் நிச்சயம் ஒரு தமிழ் தொலைக்காட்சி நிறுவனத்தை வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முதலாவது பிராந்திய தொலைக்காட்சியாக ஆரம்பிப்பேன் என்று என்னிடம் குகநாதன் கூறினார்.*

*அவர் அன்று உறுதிபடக்கூறியது இன்று நிதர்சனமாகி* DAN *தொலைக்காட்சியாக பரிணமித்து நிற்பதை நான் காணுகின்றேன். இராமர் இலங்கை வர வானர சேனை பாலம் அமைத்தது போல,* DAN *தொலைக்காட்சியின் ஆரம்பத்துக்கு எனது கொக்குவில் இல்லத்தையும் குகநாதனுக்கு வழங்கி உதவியதையிட்டு இத்தருணத்தில் மகிழ்ச்சியடைகிறேன்.*

*பாரிஸில் பிரவாகமெடுத்து இன்று ஒரு மகாநதியாக* DAN *தொலைக்காட்சி நிறுவனம், 21 ஆண்டுகளை வட பகுதியின் மண் வாசனை ததும்ப பூர்த்தி செய்வது குகநாத னும் நானும் பிறந்த யாழ்ப்பாணத்தினதும் வடக்கு - கிழக்கின் ஏனைய அருமை பெருமைகளையும் உலகறிய வைப்பதாகவே இருக்கின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
எடுத்த வேலையை செய்து முடிப்பதில் சிறு சிரமம் இருக்கும். பேச்சிலும் செயலிலும் நேர்மையாக உள்ளோருக்கு நல்ல நாள்.குடும்பக் கவலைகள் தீரும். பணியாளர்கள் நன்மை அடைவர்.

**இடபம்**
பேச்சில் கவனம் தேவை. பணியில் அலட்சியம் காட்டாதீர். தேவையற்ற பயத்தை உதறித்தள்ளுவது நல்லது. தவறு செய்யும் நபர்களுடன் நட்பு கொள்ள வேண்டாம்.

**மிதுனம்**
மனதில் உற்சாகம் கூடும். பேச்சால் நன்மை உண்டு. இன்று போட்டி பந்தயங்களில் பங்கேற்றால் பரிசு கிடைக்கும். கவலை தீரும். நீங்கள் நம்பியவர் நேர்மையாளராக இருப்பார்.

**கடகம்**
அலட்சியமின்றி மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ளுங்கள் மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் குறைய அனுமதிக்காதீர்கள். எதிரி போல் செயல்பட்டவர்கள் நன்மை செய்த செய்தி வரும்.

**சிம்மம்**
புதிய முறையில் பணியை அணுகி நன்மை காண்பீர்கள். புதிய முதலீடுகள் லாபத்தை நோக்கிச் செல்லும்.வாகன வகையில் இருந்த பிரச்னை தீரும். கவலை முடிவுக்கு வரும்.

**கன்னி**
பணியாளர்கள் மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. நிலம் சம்பந்தப்பட்ட புதிய முதலீடுகளைத் தள்ளிப்போடுங்கள். கலைத்துறையினரின் அறிமுகம் கிடைக்கும். மகிழ்ச்சி கூடும்.

**துலாம்**
உங்களின் செல்வாக்கு கூடும். தனவரவு நன்றாக இருக்கும். உங்களது கடின உழைப்பை நிர்வாகம் புரிந்து கொள்ளத் தாமதமாகும். வியாபாரத்தில் இருந்த பிரச்னை அகலும். மகிழ்ச்சி உண்டு.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் இருந்த வாக்குவாதம் முடிவுக்கு வரும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். வெளிநாட்டில் உள்ள உறவினர், நண்பரிடம் இருந்து நல்ல செய்தி வரும்.

**தனுசு**
உடல் நலம் மேம்படும். நேர்மையான சிந்தனைகளைக் கூட்டுங்கள். குடும்ப அமைதி திருப்தி தரும். பணிச்சுமை அதிகரிக்கும். பணியில் இருந்த தடையை முறியடித்து முன்னேறுவீர்கள்.

**மகரம்**
தொழிலில் அதிக ஆதாயத்துடன் புதிய வேலை வந்து சேரலாம். உயரதிகாரிகளின் ஆதரவும் சலுகைகளும் உங்களுக்கு கிடைக்கும். உழைப்பை அதிகமாக்க வேண்டியிருக்கும். பயம் நீங்கும்.

**கும்பம்**
குழந்தைகளின் வாழ்வில் நீங்கள் விரும்பிய நன்மை வரும். நட்பால் நன்மை கிட்டும் நாள். கூட்டு முயற்சி வெற்றி பெறும். ஒவ்வாத உணவை சாப்பிட்டதால் ஏற்பட்ட தொல்லை தீரும்.

**மீனம்**
வாகன யோகம் உண்டு. வீடு வாங்கும் வாய்ப்பு வரும். உத்திரட்டாதி: புதிய விஷயத்தை கற்றுக் கொண்டு அதில் தேர்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் மகிழ்வான போக்கு காணப்படும். உபரி வருமானம் உண்டு.

# தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி பொங்கல் நிகழ்வில் பங்கேற்பார்

*சென்னை, ஜன. 01*

மருத்துவக் கல்லூரிகளைத் திறந்து வைப்பதற்காகப் பிரதமர் மோடி தமிழகம் வரவுள்ள நிலையில், மதுரையில் நடைபெறும் பொங்கல் விழாவில் அவர் கலந்துகொள்வார் என்று தமிழக பா. ஜ. க. தெரிவித்துள்ளது.

ஜனவரி 12 ஆம் திகதி தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறந்து வைக்கப் பிரதமர் மோடி, வருகை தரவுள்ளார். பிரதமரின் நிகழ்ச்சிக்காகத் தமிழக அரசு சில இடங்களை தேர்வு செய்து அனுப்பிய நிலையில், பிரதமர் அலுவலகமோ விருதுநகரில் இந்த விழாவை வைத்துக் கொள்ளலாம் என்று தமிழக அரசிடம் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.





மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பதற்குப் பிரதமர் வரவுள்ள சமயத்தில் தமிழகத்தில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. மதுரையில் மண்டேலா நகரில் பா.ஜ.க. சார்பில் ஜனவரி 12 இல் பொங்கல் விழா நடைபெறு கிறது. 1000 பானைகளில் பொங்கல் வைத்துக் கொண்டாட இருப்பதாக பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக அறிவிப்பு வெளியிட்டுள்ள தமிழக பா. ஜ.க. தலைவர் அண்ணாமலை, "தமி ழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை ஒட்டி தமிழக பா.ஜ.க. சார்பில் 'மோடி பொங்கல் ' நிகழ்ச்சி வரும் 12 ஆம் திகதி மதுரையில் கொண்டாடப்பட உள்ளது.

இதில் பங்கேற்று பிரதமர் மோடி சிறப்பிக்க உள்ளார். இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துச் சிறப்பாக நடத்த பா.ஜ.க. சார்பில் மாநில பொதுச் செயலாளர் கரு.நாகராஜன் தலைமையில் 12 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பொங்கல் விழாவில் பங்கேற்ற பின் விருது நகரில் நடைபெறும் நிகழ்ச்சியில் 11 மருத்துவக் கல்லூரிகளைப் பிரதமர் திறந்து வைக்கவுள்ளார் என பா.ஜ.க. தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு மதுரையில் காங்கிரஸ் சார்பில் கொண்டாடப்பட்ட பொங்கல் நிகழ்ச்சியில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டணியால் காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான பலனும் இல்லை

## தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி

*சென்னை, ஜன.1*

காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்ற முழக்கத்தை நாங்கள் கைவிடவில்லை என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பில் வங்கதேச விடுதலைப் பொன்விழாவும், அன்னை இந்திரா காந்தியும் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் நடைபெற்றது, இந்தக் கருத்தரங்கத்தில் பங்கேற்று உரையாற்றிய தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:

இந்தியாவில் உள்ள எந்த ஒரு கட்சியாவது கூட்டணி இல்லாமல் நிற்பதற்குத் தயாரா? பா.ஜ.க., இடது சாரி கட்சிகள், சிவசேனா, மம்தா பானர்ஜி, தமிழகத்தில் திமுக, அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கூட்டணி இல்லாமல் நிற்பதற்குத் தயாரா? ஆனால், காங்கிரஸ் மட்டும் கூட்டணி இல்லாமல் நிற்க வேண்டும் என்று ஏன் சொல்கிறீர்கள்?

கூட்டணி என்பதன் பொருளே அதன் மூலமாக நமக்கு பலன் அடைய வேண்டும் என்பது தான். ஆனால் துரதிர்ஷ்வசமாக தமிழகத்தில் கடந்த 40 ஆண்டு காலமாக கூட்டணியின் காரணமாக காங்கிரஸ் சரிந்து விழுந்திருக்கிறோம். ஓர் அடி முன்னே வைத்தால் ஓர் அடி பின்னே வைக்கிறோம். பின்னால் ஓர் அடி வைப்பதால் முன்னே அடியெடுத்து வைக்கமாட்டோம் என்று நினைக்காதீர்கள். அதுபோல், காமராஜர் ஆட்சியை கூட்டணியால் மறந்துவிட்டோமென்று நினைக்காதீர்கள்.

கடந்த மக்களவைத் தேர்தலில் அகில இந்திய காங்கிரஸ் கூட பிரதமர் வேட்பாளரை விட அறிவிக்கவில்லை. ஆனால், நமது கூட்டணியின் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அவர்கள், ராகுல் காந்திதான் பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்தார். அந்தத் தேர்தலில் தமிழ்நாட்டில் நாம் பெரு வெற்றிபெற்றதற்கு இதுவும் காரணம்" எனத் தெரிவித்தார்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் மறியல் போராட்டம்

## இன்றைய தினம் நடத்துகின்றனர்

*இராமேஸ்வரம், ஜன.01*

இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் கடந்த 10 நாள்களுக்க மேலாக நடத்தி வந்த வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெற்றனர். அதே வேளையில் இன்று அவர்கள் ரயில் மறியல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்கள்.

இதையடுத்து இவர்கள் நாளை மறுதினம் திங்கட் கிழமை முதல் மீன் பிடிக்க கடலுக்கு செல்லவுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 68 பேர் இலங்கை கடற்படையால் இரு வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து 68 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்யவும், 10 விசைப்படகுகளை விடுவிக்கவும் வலியுறுத்தி இராமேசுவரம் மீனவர்கள் டிசெம்பர் 20 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டமும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தினர்.

இன்று ரயில் மறியல் போராட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் கைதான தமிழக மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

# 43 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 01

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் இவர்கள் முன்னிலைப்படுத் தப்பட்டபோது விளக்கமறியலை ஜனவரி 13 ஆம் திகதி வரை நீடிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

நெடுந்தீவுக்கு அருகே சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(அ)



# ஆரையம்பதி வைத்தியசாலை 5 விருதுகளை பெற்று சாதனை!

மட்டக்களப்பு,ஜன. 01

மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மாவட்ட வைத்தியசாலைகளுக்கிடையே நடத்திய போட்டியில் ஐந்து விருதுகளைப் பெற்று ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சாதனை படைத்துள்ளது.

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி திருநாவுக்கரசு கௌரிசங்கரன் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுகாதார நிறுவனங்களுக்கிடையே நடத்தப்பட்ட சிறந்த செயற்றிறனுக்கான போட்டியில் மாவட்டத்திலேயே முதல் இடம்பெற்றுச் சாதனை படைத்த

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சிறந்த ஆரோக்கிய வாழ்வு நிலையப்போட்டியிலும் முதலிடம் பெற்றுள்ளது.


ஆரம்ப சுகாதார பராமரிப்பு திட்டம் 2019/2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் இரண்டாமிடத்தையும் ஆய்வுகூட சேவைகள் போட்டியிலும் சிறந்த மருந்துக் களஞ்சியசாலை மற்றும் மருந்து வழங்கல் சேவையிலும் சிறப்பு பாராட்டு விருதுகளையும் அது சுவீகரித்துக் கொண்டது.

இதற்கான விருதுகள் இவ்வாண்டுக்கான செயற்றிறன் விருது வழங்கும் விழாவின் போது வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இவ் விருதுகளை வழங்கினார். (அ)

# அரசு உடனே பதவி விலகி தேர்தலை நடத்தவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விதுர கோரிக்கை



**கொழும்பு, ஜன. 01**

**“நாட்டை உரிய வகையில் நிர்வகிக்க முடியாவிட்டால், இந்த அரசு பதவி விலகி - பொதுத்தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும்.” - என்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:

தற்போதைய சூழ்நிலையில் எமக்கு தலைவர்கள் அல்ல, வேலைத்திட்டங்களே அவசியமாக உள்ளன. மக்களை தியாகம் செய்யுமாறு கூறிவிட்டு, ஆட்சியாளர்கள் சுகம் அனுபவித்தால் அதனை அனுமதிக்க முடியாது.

தற்போதைய அமைச்சரவை தோல்வி கண்டுள்ளது. அமைச்சரவை தோல்வியெனில் முழு நாடும் தோல்விதான். எனவே, துறைசார் அனுபவம் உள்ளவர்களை அந்தந்த அமைச்சு பதவிக்கு நியமிக்குமாறு வலியுறுத்துகின்றேன்.

அவ்வாறானவர்களை நியமித்து, நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு புதிய வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும்.

அரசுக்கு இந்த நாட்டை நிர்வகிக்க முடியாவிட்டால், பதவி விலகி - தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும். அப்போது நாட்டை நிர்வகிக்கக் கூடியவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்பார்கள்-என்றார். (அ)

# பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளர் சிறீரஞ்சன் கடமைகளை பொறுப்பேற்றார்

கிளிநொச்சி, ஜன. 01

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முழங்காவில் தேசிய பாடசாலையின் பிரதி அதிபருமான சிறீரஞ்சன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை புதிய தவிசாளரை செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.



இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கயன், பூநகரி பிரதேச சபையின் உபதவிசாளர் எமிலியாம்பிள்ளை, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் செயலாளர் விஜயன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் செயல்பாட்டாளர்கள், சபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# 12 மூத்த விவசாயிகளுக்கு மட்டக்களப்பில் கௌரவம்





கல்லடி, ஜன. 01

சர்வதேச விவசாயிகள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மண்முனை மேற்கு விவசாயிகள் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் ‘விவசாயப் புரட்சியாளர்கள்’ எனும் நாமம் சூட்டி மூத்த முன்னோடி விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு வவுணதீவு உழவர் சந்தியில் நேற்று இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் ஆர். குணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன், மண்முனைமேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், விதை நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலைய பிரதி விவசாயப் பணிப்பாளர் ஆர்.சிவனேசன், உறுகாம நீர்பாசனத் திட்டப் பொறியியலாளர் ஏ.விஸ்ணுரூபன், வவுணதீவு பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஜி.எஸ். பிரியங்கர மற்றும் பட்டிருப்பு, கல்குடா மட்டக்களப்பு பிரதேச தமிழ் விவசாயிகள் அமைப்பினர், கைத்தொழில் விவசாய சம்மேளன பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்ற இந் நிகழ்வில் விவசாயிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் 12 மூத்த முன்னோடி விவசாயிகள் பொன்னாடை போர்த்தி மகுடம் அணிவித்து நினைவுப் பரிசில்களும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்டத்தில் இடம்பெற்ற சர்வதேச விவசாயிகள் தினக் கொண்டாட்டங்களில் முதல் தடவையாக மூத்த முன் னோடி விவசாயிகள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)



## தேசிய வாசிப்பு மாத நிகழ்வில்

# வலி தெற்கு பிரதேச சபை தேசிய ரீதியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜன. 01

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத செயல் திட்டங்களில் வலி. தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத விருது வழங்கல் நிகழ்வு கடந்த புதன் கிழமை கொழும்பு தேசிய நூலக கேட்போர்கூடத்தில் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் தலைவர் சோனால குணவர்த்தன தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வைத்து வலி தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன், சுன்னாகம் பொது நூலகத்தின் பிரதம நூலகர் சு.ஜெயலட்சுமி ஆகியோர் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றமைக்கான விருதையும் சான்றிதழையும் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, இரண்டாம் இடத்தை வத்தளைபிரதேச சபையின் ஹந்தளை பொது நூலகம் பெற்றுக்கொண்டது. (அ)

# இலங்கையருக்கு ஜப்பானில் அதிகளவில் தொழில்வாய்ப்பு

கொழும்பு, ஜன. 01

இலங்கையர்களுக்கு அதிகளவான தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு ஜப்பான் செயற்பட்டு வருவதாகவும், ஜப்பானிய முதலீட்டாளர்களை இலங்கைக்கு ஈர்ப்பதற்கு முன்னுரிமை வழங்குவதாகவும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹெய்டைகி தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு ,70 வருடங்கள் 2022ஆம் ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு, கண்டி புனித தலதா மாளிகை வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் அவர் இதனைத் குறிப்பிட்டார்.

தலதா மாளிகைக்கு சென்ற தூதுவரை, சர்வதேச அலுவல்கள் அமைச்சின் செயலாளர் காமினி பண்டார வரவேற்றார். (அ)

# பொது இடங்களில் புகைப்பிடிப்போரை கண்டறிவதற்கு புதிய செயலி அறிமுகம்

கொழும்பு, ஜன. 01

பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்களை கண்டறிவதற்காக புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து குறித்த செயலியை அறிமுகப்படுத்தியுள்ளன.

குறித்த செயலியைத் தரவிறக்கம் செய்வதன் ஊடாக பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்கள் தொடர்பில் எந்தவொரு நபருக்கும் தகவல் வழங்க முடியும்.

இதேவேளை, எதிர்காலத்தில் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

# 202 பில்லியன் ரூபாயை அச்சிட இலங்கை மத்திய வங்கி முடிவு

கொழும்பு, ஜன. 01

202 பில்லியன் ரூபாயை அச்சிடுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

ஒக்ரோபர் 14 ஆம் திகதியின் பின்னர் பணம் அச்சிடப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 825 பில்லியன் ரூபாய் அச்சிடப்பட்டுள்ளது.

வட்டி விகிதம் மற்றும் நாணய மாற்று விகிதத்தை தொடர்ந்தும் கட்டுப்படுத்துவதன் மூலம் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து வருவதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி டபிள்யூ.ஏ. விஜேவர்த்தன தெரிவித்தார். (அ)

## 41 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது

மன்னார், ஜன. 01

மன்னார் - நறுவிலிக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 41 கிலோகிராம் மஞ்சளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்காலை பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# யாழ். பல்கலை முன்னாள் நூலகரின் இராண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தின் இராண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வும், நினைவுப் பேருரையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை) பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நினைவுகூரப்பட்டது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஸ்ட உதவி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் ஆகியோர் அஞ்சலியுரை ஆற்றினர். சிரேஷ்ட உதவி நூலகர் சி. கேதீஸ்வரன்" இணையவழி கூட்டுறவுப் பட்டியலாக்கம் - பொதுநூலகங்களுக்கான சாதகநிலைமைகள்" என்னும் தலைப்பில் நினைவுரையாற்றினார்.

அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் தன்னார்வத்தோடு தனிப்பட சேகரித்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களும், ஏராளமான தமிழரின் தொன்மைசார் மரபுரிமை அரும் பொருள்களும் யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்குக் கையளிக்கப்பட்டன. குடும்பத்தினரால் கையளிக்கப்பட்ட பொருள்களை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதில் நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இதற்கான உடன்படிக்கையில் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தரும், குடும்பத் தினர் சார்பில் அவரது துணைவரும் கைச்சாத்திட்டனர்.

நிகழ்வில் பல்கலைக்கழக நூலக ஆளணியினர், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (அ)

66 ஆவது
01.01.2022
பிறந்த தின வாழ்த்து
கல்விக் காருண்யன்
ஈ.எஸ்.பி. நாகரத்தினம்



66 ஆவது அகவையில் காலடி பதிக்கும்
பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான
ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அவர்கள்
நீடுழி காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.
யாழ். கல்விச் சமூகம்.

# இந்தியா, பாகிஸ்தானிடம் கடன் கோரும் இலங்கை!

கொழும்பு, ஜன. 01

அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன இந்தியா மற்றும் பாகிஸ்தானிடம் கடன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சர், இரண்டு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதாக ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரிசி, பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களை இந்தியா மற்றும் பாகிஸ்தானிடம் இருந்து இலங்கை கொள்வனவு செய்துவரும் நிலையில், மேலும் சில அத்தியாவசிய பொருள்களின் கொள்வனவுக்காக இவ்வாறு கடன் கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்படும் என பல்வேறு தரப்பினரும் எச்சரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# நாட்டில் 40 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு பைஸர்

கொழும்பு, ஜன. 01

நாட்டில் 40 இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு பைஸர் செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 130,644 பேருக்கு, பைஸர் செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, பைஸர் செயலூக்கி தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 40 இலட்சத்து 6 ஆயிரத்து 720 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# கடுமையான தீர்மானங்களை 2022இல் எடுப்பார் ஜனாதிபதி!

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறுகிறார்



கொழும்பு, ஜன. 01

**”பங்காளிக்கட்சிகளின் அழுத்தத்தால் சில தீர்மானங்களை மீளப்பெறவேண்டிய நிலைமை கடந்த காலத்தில் அரசுக்கு ஏற்பட்டது. இனி அவ்வாறு நடக்காது. 2022 முதல் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும்.”- என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரசு எதிர்ப்பார்த்த இலக்கை நோக்கி கடந்த இரண்டு வருடங்களில் பயணிக்க முடியாமல்போனது. இதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 2022 ஆம் ஆண்டு முதல் மக்களின் எதிர்ப்பார்ப்புகள் உரிய வகையில் நிறைவேற்றப்படும். அதற்காக கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும். ஜனாதிபதி தலைமையில் கடந்த புதன்கிழமை இது சம்பந்தமாக தீர்க்கமான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்கப்படும். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் இடம்பெறுமானால் வேலையை நிறுத்தியாவது, அந்த திட்டத்தை நாம் நிச்சயம் செயல்படுத்துவோம்.

எமது தோழமைக்கட்சிகள் மற்றும் சில குழுக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் சில தீர்மானங்களை நாம் மீளபெற்றோம். இது பாரிய தவறாகும். கிழக்கு முனையத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டனர். இன்று என்ன நடக்கின்றது? கிழக்கு முனையம் மேம்படுத்தப்படவில்லை. முதலீட்டாளர்களும் வரவில்லை. இதனால் நாட்டுக்குத்தான் பாதிப்பு.

எனவே, இனிவரும் காலங்களில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும். கூட்டு பொறுப்பை ஏற்காதவர்கள் அவர்களின் வழியில் பயணிக்கலாம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் என்பது எமக்கு பிரச்னை கிடையாது -என்றார். (அ)

# மலேரியாவை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு

கொழும்பு, ஜன. 01

யாழ்ப்பாணத்தில் பரவிவரும் மலேரியாவை கட்டுப்படுத்த குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மலேரியா பாதிக்கப்பட்ட ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பொதுச் சுகாதாரப் பிரிவில் மலேரியா கட்டுப்பாட்டை அதிகரிக்க சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மலேரியா தடுப்புப் பிரசாரப் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட நபர் கண்டறியப்பட்ட பகுதியில் நுளம்புகளை விரைவாகவும் முழுமையாகவும் அகற்றுவதை உறுதி செய்வதற்காக கடந்த செவ்வாய்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள மலேரியா தடுப்பு மையங்கள் மற்றும் பிரதேச சுகாதார அலுவலகங்களுக்கு கொழும்பில் இருந்து மலேரியா தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுகளை அனுப்பியதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# கொழும்பில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஜன. 01

கொழும்பு நகரம் உள்ளிட்ட கொழும்பு புறநகர் பிரதேசங்களில் நேற்று முதல் பொலிஸாரினால் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலி முகத்திடலில் விசேட பொலிஸ் பரிசோதனைகள் இடம்பெறுவதுடன் இரவு நேரம் முழுதும் போக்குவரத்து பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதற்கமைய, மதுபோதையில் வாகனங்களை செலுத்துவோர், அதிக வேகத்தில் வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படும் நபர்களை இனங்காண்பதற்காக கொழும்பு நகரின் பல்வேறு பிரதேசங்களில் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# உணவு தட்டுப்பாடு குறித்து மக்கள் அஞ்ச வேண்டாம்!

## சொல்கிறார் விவசாயப் பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, ஜன. 01

நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என அச்சம் கொள்ள தேவையில்லையென விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான உணவாக சோறு உட்கொள்ளப்படுவதால், அடுத்த வருடத்தில் பெரும்பாலும் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என சிலர் கணிப்புகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும், சிறுபோகத்திற்காக 5 இலட்சம் ஹெக்ரெயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர்ச் செய்கையில் கிடைக்கப்பெற்ற விளைச்சல் 6 மாத காலத்துக்கு போதுமானதாகவுள்ளதாக அவர் தெரிவித்தார். அதேநேரம், பெரும்போகத் தில் தற்போது 7 இலட்சத்துக் கும் அதிக நிலப் பரப்பில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அதன் விளைச்சல் உரத்தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டிருப்பினும், நாட்டின் நுகர்வுக்கு போதுமானதாக உள்ளதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.(அ)

# இலங்கை அதிகாரிகளை கௌரவித்த இந்திய தூதர்





கொழும்பு, ஜன. 01

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் பணியாற்றிவரும் இலங்கை பிரஜைகள் பலரை, அவர்களுடைய அர்ப்பணிப்புடனான நீண்டகால சேவையை அங்கீகரிக்கும் வகையில் தூதுவர் கோபால் பாக்லே , தூதரகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விசேட நிகழ்வொன்றில் கௌரவித்தார்.

30 வருடங்களுக்கும் அதிககாலமாக சேவையாற்றிவரும் திருமதி மாலா கமகே மற்றும் நெய்ல் ஜோசப் ரெஜிஸ் ஆகிய இருவருக்கும் இந்தியாவுக்கான இருவழி விமான ரிக்கெட்டுக்களும் இந்திய பயணத்துக்கான விசேட பணக்கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் திருமதி ஷிரானி ஸ்ரீதரன், திருமதி சுஜாதா ஹெட்டியாராச்சி, திருமதி நிரஞ்சலா மனோரி ஜோசப் மற்றும் திருமதி லக்ஷி சமரவிக்ரம ஆகியோருக்கு அண்மையில் பதவி உயர்வும் வழங்கப்பட்டது.

தூதரகத்தில் அதிசிறந்த சேவையை வழங்கிவருகின்றமைக்காக இலங்கையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு தூதுவர் நன்றி தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையில் அபிவிருத்தி ஒத்துழைப்பு, பயணங்கள், வர்த்தகம் மற்றும் வியாபாரம் போன்ற மக்களுடன் நேரடியான தொடர்பைக் கொண்டுள்ள விடயங்களில் இந்திய - இலங்கை உறவுகளை வலுவாக்கும் நோக்கத்துக்கு தூதரகத்துக்கான அவர்களின் பங்களிப்பு ஆதரவாக அமைந்தது என தூதுவர் குறிப்பிட்டார்.

தூதரக அலுவலர்களில் கிட்டத்தட்ட 50 வீதமானவர்கள் இலங்கைப் பிரஜைகளாக உள்ளனர். இதேபோல அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலகங்களிலும் கண்டியில் உள்ள இந்தியத் துணை தூதரகத்திலும் கணிசமான அளவிலான அலுவலர்கள் உள்ளூரிலிருந்து பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளினதும் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் பல்வேறு சமூகங்கள், மொழிகள், கலாசாரப் பின்னணிகளைச் சார்ந்தவர்களாக அவர்கள் உள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# 2022 முதல் மணல், கல் உரிமங்கள் ஒரே நிறுவனத்தால் வழங்கப்படும்

கொழும்பு, ஜன. 01

இன்று முதல் ஒரே நிறுவனத்தால் மண், மணல் மற்றும் கல் அகழ்வு மற்றும் போக்குவரத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்துக்கு சென்று உரிய ஆவணங்களை சமர்ப்பித்ததன் பின்னர் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என புவியியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

இது தொடர்பான சேவைகளை புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திலிருந்து நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு முன்னர் மண், மணல், கல் போன்றவற்றை எடுத்துச் செல்வதற்கும், அகழ்வு செய்வதற்கும் அனுமதிப்பத்திரம் பெறும்போது மக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகினர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

# ஏழ்தலப் புகழ் மைந்தன் சி.வை.தா.

■ திருமதி தமிழ்செல்வி சண்முகானந்தம்



**“அக்காலத்திலே சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் நடத்திய முதல் பி.ஏ.தேர்வில் முதன் மாணாக்கராய்த் தேறிய பெருமையும் இவரைச் சாரும். பி.எல். பரீட்ரசையிலும் தேறி வழுங்கறிஞர் ஆனார். புதுக்கோட்டையிலே நீதிபதியாகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார்.**

ஏழாலையம்பதி ஏழு தலங்களால் புகழ்பெற்ற ஊராகும். இவ்வூரின் முதல் மைந்தன் என அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் சிறப்புக்குரியவர் சி.வை.தா. எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆவார்.

இவர் சான்றோராக விளங்கிய காரணத்தாலும் தான்செய்த தமிழ்ப் பணியினாலும் பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்தமையினால் அச்சிறப்புக்கு உரியவராக விளங்குகின்றார்.

*12.09.1832* இல் ஏழாலையில் பிறந்து தமது இருபதாவது வயதுவரை மாணவப் பருவத்தை ஏழாலையிலே கழித்தவர். சி.வை.தா. தந்தையரான வைரவநாதருடனும் தாயாரான பெருந்தேவியுடனும் தம்பியர் அறுவருடனும் சட்டம்பியார் வளவு என இன்றும் சுட்டிப் பேசப்படும் வளவிலேயே வாழ்ந்தவர்.

ஏழாலையின் தென்பகுதியில் - இன்றைய மயிலங்காட்டுப் பகுதியில் பண்டிதர் நீலயினார் எனும் சட்டம்பியார் நடத்திய திண்ணைப் பள்ளியிலே நீலயினார் எனும் சட்டம்பியார் நடத்திய திண்ணைப் பள்ளியிலே சேர்க்கப்பட்டு எண்ணும் எழுத்தும் கற்று வந்தார்.

சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சைவ ஞானமும் உடையாரும் அந்நாளில் திண்ணைப்பள்ளி ஆசிரியர்களாக விளங்கினார். இதனால் சி.வை.தா.வும் ஆரம்பக் காலங்களில் சைவப் பற்றும் சைவஞானமும் மிக்கவராய்த் திகழ்ந்தார்.

எழுத்து அறிவித்த இறைவனாக தமது தந்தையார் வைரவநாதரினதும் தாயார் பெருந்தேவியாரதும் வழி நடத்துதற்படி சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயரின் பள்ளியிலே சேர்ந்து இலக்கிய இலக்கணங்கற்றார். வரதராச பண்டிதரிடம் பாரதம் முதலாம் இலக்கிய நூல்களையும் கற்று அறிவுமிக்கவராயினார்.

இவ்வாறு மரபு வழிக் கல்வியினூடாகச் சைவ அறிவையும், தமிழறிவையும் பெற்று வந்த தாமோதரம்பிள்ளை அக்காலத்தில் இயங்கிய நிறுவன ரீதியான கல்விக்கூடமான வட்டுக்கோட்டை ஆங்கிலக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, புகழ்பூத்த நல்லாசிரியர்களான சங்குவேலி வல்லியம் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, வைமன் கதிரவேற்பிள்ளை, கரோல் சிசுநாதபிள்ளை போன்றோரிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார்.

இவ்வாறான பெறுதற்கரிய பேறான சர்வகலாவல்லோரிடம் கற்ற கல்வி பின்னாளிலே அவரது வாழ்வுக்கும் தமிழ் மக்கள் உயர்வுக்கும் உதவியது. இவருடைய தமிழ்த் திறமையை நெவின்ஸ் பல தடவைகள் பல மேடைகளில் புகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது தமிழ்த் திறமையினால் கோப்பாய் போதனா பாடசாலையின் ஆசிரியராக விளங்கும் வாய்ப்புக் கிடைத்தது. *1852* முதல் *1854* வரை அங்கு கடமையாற்றிய காலத்திலேயே நீதிநெறி விளக்க உரை எழுதித் தமது கன்னிப் பதிப்பை ஆரம்பித்தார்.

அக்காலத்தில் தான் அறிவுத் திறமையும் எழுத்துத் திறமையும் தென்னிந்தியா வரையில் எட்டியது. நாவலரின் ஆங்கில ஆசானும் அவரின் தமிழ் மாணவனுமாகிய பேர்சிவல் பாதிரியார் சென்னையில் தாம் பிரசுரித்து வெளியிட்ட “தினவர்த்தமானி“ எனும் பத்திரிகைக்குத் தக்க ஆசிரியனைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது தாமோதரம்பிள்ளையின் அறிவுத்தரத்தினை உணர்ந்து அவரையே தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியராக நியமித்தார்.

இவரது எழுத்துத் திறமையும் அறிவுத் திறமையையும் உணர்ந்த அரசினர் சென்னை இராஜதானிக் கல்லூரிக்கு தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமித்தனர்.

அக்காலத்திலே சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் நடத்திய முதல் பி.ஏ.தேர்வில் முதன் மாணாக்கராய்த் தேறிய பெருமையும் இவரைச் சாரும். பி.எல். பரீட்ரசையிலும் தேறி வழுங்கறிஞர் ஆனார். புதுக்கோட்டையிலே நீதிபதியாகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார்.

நாவலர் பெருமான் டாக்டர் உ.வே.சாமிநாதையர் ஆகிய இருவரும் தமிழ் நூல்களைப் பதிப்பித்து தமிழ்த் தொண்டு புரிந்தது போன்று இவரும் தொல்காப்பியம், கலித்தொகை, வீரசோழியம் போன்ற நூல்களைப் பதிப்பித்து தமிழுலகில் தமக்கென ஓர் அழியாத இடத்தைப் பெற்றுள்ளார்.

இவரது தேசப் பணியையும், தமிழ்ப் பணியையும் கண்டு ஆச்சரியப்பட்ட சென்னை அரசாங்கம் இவருக்கு இராவ்பகதூர் (Rao Badadur) என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. தமிழ் ஆராய்ச்சித் துறையின் தந்தை என இவர் யாவராலும் பாராட்டப் பெற்றனர்.

இத்தகைய பெருமைமிக்க இப்பெரியார் நாவலரைப் போன்று கிறிஸ்தவ மிஸனரிகளினதும் உள்ளூர் போலி விசுவாசிகளினதும் பிடியிலிருந்து ஊர் மக்களையும் பிறரையும் விடுவிக்க ஆவல் கொண்டார். நாவலர் சிதம்பரத்தில் ஆலயச் சூழலில் என்ன நினைவோடு சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கினாரோ அதே நோக்கத்தோடு தனது ஜன்ம பூமியாகிய ஏழாலையிலும் திருத்தலங்கள் நன்கு சூழ்ந்த இடமாகவும் மருதநிலப் பாங்கான இடமாகவும் விளங்கும் ஏழு கோயிலடியில் சைவப் பிரகாச வித்தியாசாலையை *1876* ஆம் ஆண்டு ஆவணி மாதம் *10* ஆம் நாள் ஆரம்பித்தார். இதனால் தான் சி.வை.தாமோதரம்பிள்ளை நாவலரின் சமயப் பணியை மேற்கொண்ட பரம்பரையின் முதல்வராக விளங்குகின்றார் எனத் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் கூறுகின்றார்.

சி.வை.தா. வினால் நிறுவப்பட்ட ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையின் முதல் தலைமை ஆசிரியராக சுன்னாகம் முருகேச பண்டிதரும் துணை ஆசிரியராக சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரும் விளங்கினார். ஓராண்டில் முருகேசு பண்டிதர் விலகிக் கொள்ள குமாரசுவாமிப்புலவர் அவர்களே தலைமை ஆசிரியரானார்.

இப் பாடசாலையின் முதல் வருடப் பரீட்சை ஆறுமுகநாவலராலும் இரண்டாம் ஆண்டுப் பரீட்சை முருகேச பண்டிதராலும் அடுத்த ஆண்டுப் பரீட்சை பன்மொழிப் புலவர் சித்தாந்த சரபம் கொக்குவில் குகதாசர் சபாரத்தின முதலியார் அவர்களினாலும் அடுத்தடுத்த ஆண்டுகளில் நாவலர் மருகர் நல்லூர் ச.பொன்னம்பலபிள்ளை அவர்களாலும் நடத்தப்பட்டுள்ளன. பரீட்சைகள் நடத்தப்பட்ட மாதம் திகதிகளும் தேர்ச்சி விபரங்களும் பிள்ளை அவர்களது பரோபகாரமும் புலவர் அவர்களால் விதந்து எழுதப்பட்ட அறிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

சி.வை.தா. அவர்கள் கல்வித் திறமை உடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பல புத்தகங்களை பரிசில் வழங்குவதில் ஆனந்தம் கொள்பவராக விளங்கினார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பரீட்சகராக இருந்த காலத்தில் தமிழில் சிறப்புச் சித்தி பெறுவோர்களது அறிவுக் கூர்மையையும் ஆங்கில அறிவையும் பரீட்சிப்பதற்காகத் தனிப்பட்ட முறையில் புறம்பான தேர்ச்சிப் பரீட்சை ஒன்றைத் தான் நடத்தி உத்தமமானோர்க்குப் பரிசில் வழங்கியதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

சி.வை.தாவினால் நிறுவப்பட்ட இப்பாடசாலையில் கற்றுத்தேறிப் பின்னாளில் பெருமதிப்புப் பெற்ற பெரியோர்களாக தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான வித்துவான் சிவஸ்ரீ சிவானந்த ஐயர், இ.பாலசுப்பிரமணிய ஐயர், வ.சுப்பிரமணியபிள்ளை, ம.மயில்வானகம்பிள்ளை, இளவாலை சங்கரப்பிள்ளை, மாவிட்டபுரம் ச.விசுவசநாத முதலியார், பன்னாலை கதிரிப்பிள்ளை உபாத்தியாயர், தையிட்டி பொன்னையா, சுன்னாகம் பண்டிதர் மாணிக்கத் தியாகராசா, ஏழாலை வி.தம்பையா உபாத்தியாயர், கொக்குவில் இளையதம்பிப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இவர்களுள் ஏழாலை வி.தம்பையா உபாத்தியாயர் அவர்கள் குமாரசுவாமிப்புலவரின் முதன் மாணாக்கராய்த் திகழ்ந்துள்ளார். இவர் புராணபடன விரிவுரையில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். ஏழாலையிலுள்ள கோயில்கள் மடங்களில் மட்டுமன்றி வடமராட்சி தென்மராட்சி போன்ற இடங்களுக்கும் சென்று பல கோயில்களில் புராணபடன விரிவுரைகளை நடாத்தி தமிழிலக்கியத்தை வளர்ந்தோர் கல்வி மட்டத்திற்கு கொண்டு வந்த பெருமைக்குரியவராகவும் விளங்கினார்.

நுண்மாண் நுழைபுலம் படைத்தவரான சிவானந்தையர் தருக்க சங்கிரக மொழிபெயர்ப்புச் செய்ததோடு புலியூர்ப் புராணம், புலியூரந்தாதி, சனி துதி முதலான நூல்களை இயற்றியவர். பண்டிதர் மாணிக்கத் தியாகராசா கதாப்பிரசங்கியாகத் திகழ்ந்ததோடு தமிழ் நாட்டு ஆதீனங்களாலும் நன்று மதிக்கப்பட்டவராக விளங்கினார்.

பிள்ளை அவர்கள் தனது முதுமைக் காலத்தில் இப்பாடசாலையை ஒரு சபையாரிடம் கையளித்து தான் வகுத்த திட்டப்படி நல்லமுறையில் இயங்க வைக்கப் பேரார்வத்துடன் முயன்று வந்தார். அப்படியான அவர் எண்ணத்திற்கு கைகொடுத்து உதவ எவரும் முன்வராதபடியினாலும் இவரின் பணமுறையினாலும் நோய் காரணமாகவும் *1898*இல் இப்பாடசாலை மூடப்பட்டது. *22* ஆண்டுகள் சிறப்பாகத் தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிய முதற் சைவப் பாடசாலை அஸ்தமித்தமை நாம் செய்த தவக் குறையேயாகும். புல நல்லறிஞர்களது தோற்றத்திற்குக் காரணமாக இருந்த இப்பாடசாலை வந்த வரத்திற்குத் தொடர்ந்து இருக்குமேயானால் பின்னாளில் ஏழாலையில் இது ஓர் உயர்தர பெருநிலைப் பள்ளியாக உயர்ந்திருக்கும் என்பது திண்ணம்.

பிள்ளையர்களால் தனது ஜென்ம பூமியாகிய ஏழாலையிலே நிறுவப்பட்ட இச் சைவப்பிரகாச வித்தியாசாலை அவரது தமிழ்ப் பணியைப் பறைசாற்றி நிற்கின்றது. நூாவலரைப் பின்பற்றித் தமிழ்ப்பணி, சமயப்பணி என்பவற்றைச் செய்த தாமோதரம்பிள்ளை அவர்களும் சி.வை.தாமோதரம்பிள்ளை என பெயர் வழங்கி வந்தமையால் அவர் சிறுப்பிட்டிக்கு உரியவர் என்ற கருத்தும் இன்றும் நிலவுகின்றது. ஆனால் அனு கொல்லளவில் அல்லாமல் பொருளளவில் இல்லை. அவருடைய தகப்பன் சிறுப்பிட்டி வைரவமுத்து என்பது உண்மை. ஆனால் அவர்களின் குடும்ப வாழ்க்கை முழுவதும் அவர் மனைவி பெருந்தேவியின் இடமாகிய ஏழாலை வடக்கு பருத்திக்கலட்டி மயிலன்வளவு சட்டம்பியார் வளவு என்ற இடத்திலேயே நடைபெற்றிருக்கின்றது.

மேலும் சி.வை.தா. ஏழாலைக்கு அருகே உள்ள ஊர்களான தெல்லிப்பளை ஆங்கிலக் கல்லூரியிலும், சுன்னாகம் முத்துக்கவிராயரிடத்தும் கல்வி பயின்றிருக்கின்றார். அவருடைய தம்பிமாரும் கந்தரோடையிலேயே கல்வி கற்றிருக்கின்றார்கள். அவருக்கு ஆரம்பக் கல்வி புகுத்திய நீலயினார் ஏழாலையில் பிரசித்தி பெற்ற ஒரு திண்ணைப் பள்ளி ஆசிரியர். அத்துடன் கல்வித் தர்மம் நிகழ்த்த வேண்டும் என்று இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தாமோதரம்பிள்ளை ஏழாலையையே அதற்குரிய இடமாகத் தெரிந்திருக்கின்றார். இத்தியாதி காரணங்களால் சி.வை.தாமோதரம்பிள்ளையின் உறவும் செறிவும் ஏழாலைக்கே மிகுதியாக உள்ளமை தெளிவு. ■



■ ரா.அரவிந்தராஜ்

# சொந்த மக்களையே கொலை செய்யும் மியன்மார் இராணுவம்

அந்தச் சிறுமி பெருங்குரலெடுத்துக் கதறும் வீடியோ காட்சியைப் பார்க்கும்போதே நெஞ்சம் பதை பதைக்கிறது. கழுத்தறுக்கப்பட்டு, இரத்த வெள்ளத்தில் கிடக்கும் தன் தாத்தாவின் உடலைப் பார்த்தபடியே, “ஐயோ... யாராச்சும் எங்க தாத்தாவைக் காப்பாத்துங்களேன்... என்னைவிட்டுப் போக மாட்டேன்னு சொன்னியே தாத்தா...” என்று பர்மிய மொழியில் கதறுகிறாள் அந்தக் கிராமத்துச் சிறுமி.

அடுத்தடுத்த வீடியோக்களில், அந்தக் கிராமத்திலிருக்கும் ஆண்கள் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டு, உடல்கள் விவசாய நிலங்களில் புதைக்கப்படும் காட்சிகளும், கை கால்கள் வெட்டப்பட்டு பலர் காடுகளில் தூக்கியெறியப்படும் காட்சிகளும் உலக நாடுகளைப் பதறச் செய்திருக்கின்றன. நம் அண்டை நாடான மியன்மாரில்தான் இந்தக் கொடூரங்கள் அரங்கேறியுள்ளன. இதைச் செய்தது ஒன்றும் எதிரி நாட்டு ராணுவம் அல்ல... மியன்மாரின் ராணுவமே தன் சொந்த மக்களை இப்படிக் கொன்று குவித்திருக்கிறது!

2021, பெப்ரவரி முதலாம் திகதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் தலைமை யிலான தேசிய ஜனநாயக லீக் கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, மியன்மாரில் துப்பாக்கி முனையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது ராணுவம். தேர்தலில் முறைகேடு செய்து வெற்றி பெற்றதாகக் கூறி அரச ஆலோசகர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஊடகங்கள், சமூக வலைதளங்கள் முடக்கப்பட்டன. பொதுவெளியில் ஐந்து பேருக்கு மேல் நடமாட, தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சியை ஏற்காத மக்கள், அகிம்சை வழிப் போராட்டங்களைத் தொடங்கினார்கள். இப்படி அமைதியான முறையில் போராடிய மக்கள் மீதுதான் கடந்த மார்ச் மாதத்திலிருந்தே கொலை வெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்திருக்கிறது மியன்மார் இராணுவம். அது இப்போது வரை நின்றபாடில்லை. கடந்த மார்ச் மாதம் மியன்மாரின் 76ஆவது ஆயுதப்படை தினத்தன்று, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் 114 பேரைச் சரமாரியாகச் சுட்டுக்கொன்றது ராணுவம். ராணுவ ஆட்சி அமைந்த மூன்று மாதங்களில் 45 குழந்தைகள் உட்பட 500இற்கும் மேற்பட்ட பொது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த எண்ணிக்கை ஏப்ரல் மாதத்தில் 600 பேர், ஜூலை மாதத்தில் 900 பேர் என உயர்ந்து கொண்டே சென்றது. இவற்றுக்கெல்லாம் ஐ.நா சபை, அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட உலக நாடுகளால் கண்டனம் மட்டுமே தெரிவிக்க முடிந்தது.

இராணுவத்தின் கொடூரங்கள் அதிகரிக்கவே... ஒருகட்டத்தில் மக்களில் ஒரு பகுதியினர் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினார்கள். கடந்த மே 6 அன்று மியன்மார் கவிஞரும், அரசியல் கைதியு மான மவுங் டின் திட் தலைமையில், திரண்ட ஏராளமான இளைஞர்கள் ‘மக்கள் பாதுகாப்புப் படை’ என்ற போராளிக்குழுவாக உருவெடுத்தனர். பல இடங்களில் கிராம மக்களுடன் இணைந்து, இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மக்களின் அகிம்சைப் போராட்டங்களுடன், ஆயுதப் போராட்டமும் ராணுவ ஆட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தவே, ராணுவத் தின் தாக்குதல் இன்னும் மூர்க்கமாகத் தொடங்கியிருக்கிறது.

டிசெம்பர் 8ஆம் திகதி, சகெயிங் கிராமத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர், 14 வயதுச் சிறுவன் உட்பட 11 பேரின் கை கால்களைக் கட்டி உயிரோடு தீவைத்திருக்கின்றனர். இதில், 11 பேரும் எரிந்து சாம்பலாகினர். இந்தக் கொடூரம் நிகழ்ந்து சில வாரங்களே ஆகியிருக்கும் சூழலில், தற்போது ராணுத்தினரால் கொல்லப்பட்டவர்கள் தொடர்பான வீடியாக்கள் வெளியாகி உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

## உயிரோடு எரிக்கப்பட்ட ஆண்கள்... கண்கள் பிடுங்கப்பட்ட உடல்கள்...



மியான்மரின் மத்தியப் பகுதியில் இருக்கும் கெனி நகரம், போராட்டங்கள் அதிக அளவில் நிகழும் பகுதி. கடந்த ஜூலையில் அந்த நகரத்தையொட்டிய கிராமங்களுக்குள் புகுந்த ராணுவத்தினர், 40-க்கும் மேற்பட்ட ஆண்களைக் கொடூரமாகச் சித்ரவதை செய்து, படுகொலை செய்திருக்கின்றனர். அந்த வீடியோ காட்சிகள் சர்வதேச ஊடகங்களிலும் சமூக வலைதளங் களிலும் வெளியாக, அதைப் பார்த்தவர்கள் பீதியில் உறைந்திருக்கிறார்கள். ‘யின்’ கிராமத்தில் 14 ஆண்களை இழுத்துச் சென்ற இராணுவத்தினர், அவர்களைப் பல மணி நேரம் சித்ரவதை செய்து, கற்களால் அடித்தே கொலை செய்துள்ளனர்.

அவர்களின் உடல்கள் விவசாய நிலங்களிலும், அடர்ந்த காடுகளிலும் தூக்கியெறியப்பட்டுள்ளன. கிறிஸ்மஸ் நாளான டிசெம்பர் 25 அன்றும் மிக மோசமான படுகொலையை நிகழ்த்தியிருக்கிறது ராணுவம். கயா மாகாணம், மோசோ கிராமத்தில் குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள் என 30 பேரை சுட்டுக்கொன்ற இராணுவம், அவர் களின் உடல்களை பெற்றோல் ஊற்றி எரித்துள்ளது. தற்போது வெளியாகியிருக்கும் வீடியோக்களில் மக்கள் பலரின் கண்கள் தோண்டியெடுக்கப் பட்டும், விரல்கள் வெட்டப்பட்டும் கிடக்கும் காட்சிகள் ஹிட்லரின் சித்ரவதை முகாம்களை நினைவு படுத்துகின்றன.

இந்தச் சம்பவங்களை நேரில் பார்த்த பெண்களின் சாட்சியங்களும் வெளியாகியிருக்கின்றன... ‘எங்கள் கிராமத்துக்குள் புகுந்த இராணுவத்தினர் ஆண்களை மட்டும் தனியாகப் பிரித்து அவர்களின் கை கால்களை இறுக்கமாகக் கட்டினார்கள். அவர்களைக் கற்களாலும் துப்பாக்கிகளாலும் தாக்கினார்கள். நாங்கள் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அவர்களை விடவில்லை. ஹதொந்தரவு செய்தால் உங்களையும் கொன்றுவிடுவோம்’ என்று மிரட்டினர். எதுவும் செய்ய முடியாத நாங்கள் தலைகுனிந்து நின்றோம்” எனத் தங்கள் குடும்ப ஆண்களை இழந்த கிராமப் பெண்கள் கண்ணீருடன் கதறியிருக்கிறார்கள்.

இதற்கிடையே ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கைதிகளுக்கான உதவிச் சங்கம் ‘மியன்மாரில் இராணுவம் அதிகாரத் தைக் கைப்பற்றியதிலிருந்து 10,700 இற்கும் மேற் பட்ட பொதுமக்கள் தடுப்புக் காவலில் வைக்கப் பட் டிருக்கிறார்கள் 1,300-க்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்லா யிரக் கணக்கான மக்கள் நாட்டைவிட்டு அகதிகளாக வெளியேறியிருக்கிறார்கள்’ என்று அறிவித்துள்ளது நிலைமையின் தீவிரத்தை உணர்த்துகிறது.

‘அமைதியைவிட உயர்வான மகிழ்ச்சி, இந்த பூமியில் வேறொன்றும் இல்லை’ என்று போதித்த புத்தரின் தேசத்தில் அமைதி திரும்புவது எப்போது?’ ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கைத் தேசியக் கொடியில் காணப்படுவது
(1) மஞ்சள் நிறப் பின்னணியில் சிவப்பு நிற வாளேந்திய சிங்க உருவம்.
(2) சிவப்பு நிறப் பின்னணியில் செம்மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம்.
(3) சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம்.

31. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டின் இறுதிப் படிமுறை எது?
(1) பிரார்த்தனை (2) மலர்வு (3) உள்ளத்தைத் தளர்த்துதல்

32. இலங்கையின் தேசிய இலச்சினையில் உள்ள சூரியனும் சந்திரனும் குறிப்பது,
(1) தன்னிறைவு (2) நிலைத்திருப்பு (3) சௌபாக்கியம்

33. சின்னமுத்து, கொப்பளிப்பான் ஆகிய நோய்களுக்கான நோய்க் காவி,
(1) நுளம்பு (2) ஈ (3) மனிதன்

34. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலைகளை மட்டும் கொண்ட விடை எது?
(1) பப்பாசி, நெல்லி (2) சாத்தாவாரி, வல்லாரை (3) கோப்பை இலை, அகத்தி

35. உணவு உண்ணும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று,
(1) உணவை விழுங்குவதற்கு முன் அதனைப் போதியளவு மெல்லுதல்.
(2) உணவை உண்ணும் போது மற்றையவர்களுடன் சிரித்துப் பேசுதல்.
(3) உணவாக உட்கொள்ளாத பச்சைமிளகாய், கொரக்கா போன்றவற்றைத் தரையில் அல்லது மேசையில் போடுதல்.

36. நாய் கடித்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது,
(1) கடித்த இடத்தைத் தூய தண்ணீரால் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
(2) கடித்த இடத்தைத் துணிக் கீலங்களினால் கட்டுதல்
(3) கைம்மருந்து இடல்

37. தோட்டத்தில் விளையும் உணவுப் பொருளில் நச்சுத்தன்மை சேர்ந்திருப்பதற்குக் காரணமாக அமைவது
(1) பயிர்களுக்குச் சேதனப்பசளை இடல்
(2) பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பெண்ணெய்யை விசுறுதல்
(3) பயிர்களுக்கு இரசாயனப் பசளையிடல்

38. வேலையொன்றைச் செய்யும் போது பதற்றத்தையும் நேரவிரயத்தையும் தவிர்ப்பதற்கு அவ்வேலையை
(1) உரிய வேளையில் உரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்.
(2) விரும்பிய ஏதேனும் ஒரு நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்.
(3) கடைசி நேரத்தில் அவசரம் அவசரமாகச் செய்து முடிக்க வேண்டும்.

39. தேசியக் கொடியில் காணப்படுவன,
(1) மலரிதழ்கள் (2) நெற்கதிர்கள் (3) அரச இலைகள்

40. கரப்பந்தாட்ட (வொலிபோல்) அணியொன்றில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை
(1) ஐந்து (2) ஆறு (3) ஏழு

41. தேசிய கீதத்தைப் பாடி முடித்ததும் செய்ய வேண்டியது,
(1) கரகோசம் செய்தல்.
(2) தலையைத் தாழ்த்தி மரியாதை செய்தல்.
(3) நின்ற இடத்தில் நின்றவாறு துள்ளுதல்.

42. பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சேவை எது?
(1) துவிச்சக்கர வண்டிக்கான அனுமதிப்பத்திரம் பெறல்.
(2) தொலைந்து போன அடையாள அட்டைபற்றிய முறைப்பாட்டைப் பதிவு செய்தல்.
(3) வியாபார நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெறல்.

43. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணிகள் எவை?
(1) மயிர்க்கொட்டி, நத்தை (2) ஆந்தை, பருந்து (3) வண்ணத்துப்பூச்சி, தேனீ

44. இலங்கைக்கு முதன் முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தவர் யார்?
(1) டங்கன்வைற் (2) சுசந்திகா ஜயசிங்க (3) ஜூலியன் போலிங்

45. 'புகும்அணி', 'மறிக்கும் அணி' என இரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாடப்படும் கிராமிய விளையாட்டு,
(1) கிளித்தட்டு (2) போர்த் தேங்காய் (3) கட்டம் பாய்தல்

### விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31.(2) | 32. (2) | 33. (3) | 34. (2) | 35. (1) | 36. (1) | 37. (3) |
| 40. (2) | 41.(2) | 42. (2) | 43. (1) | 44. (1) | 45. (1) | 46. (3) | 47. (3) |
| | | | | | | 56. (2) | 57. (1) |

# ரணிலின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்றுக

## அரசிடம் வேண்டுகோள்



இரத்தினபுரி, ஜன. 01

“நாட்டில் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க சிறந்த முன்மொழிவுகளை வழங்கியுள்ளார். இதனைக் கவனத்தில் கொண்டு அரசு செயபட வேண்டும். ரணிலின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“கடந்த காலத்தில் நிபுணர்களின் வழிகாட்டல்களை புறக்கணித்து தான்தோன்றித்தனமான தீர்மானங்களை அரசு எடுத்திருந்தமையின் பிரதிபலனைத்தான் நாட்டு மக்கள் இன்று எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. சேதனைப் பசளை பாவனை தொடர்பில் எவ்வித முன் ஏற்பாடுகளுமின்றி ஜனாதிபதி எடுத்திருந்த தீர்மானத்தால் ஒட்டுமொத்த நாடும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மரக்கறிகளின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

அத்தியாவசியப் பொருட்கள் முதல் எந்தவொரு பொருட்களுக்கும் கட்டுப்பாட்டு விலையொன்றை நிர்ணயிக்க முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்கும் ஒரு முக்கிய தரப்பாக எமது மலையக மக்களே உள்ளனர். 15ஆயிரத்துக்கும் குறைவான சம்பளத்தையே தோட்டங்களில் இவர்களால் பெற முடிகிறது. சமகாலத்தில் உள்ள வாழ்க்கைச் செலவுக்கு இந்தச் சம்பளத்தை கொண்டு எவ்வாறு ஈடுகொடுக்க முடியும்?.

தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்லும் பட்சத்தில் மலையக மக்கள் வீதிக்கு இறங்கும் நிலை ஏற்படும். பெருந்தோட்டங்கள் முழுவதும் கூட்டுறவு சங்கங்களை விரிவுப்படுத்தி மானிய முறையில் பொருட்களை பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்று உடனடியாக தயாரிக்கப்பட வேண்டும். அதேபோன்று பெருந்தோட்டப் பகுதிகளில் சதொச கிளைகளும் உருவாக்கப்பட வேண்டும். நாட்டில் மிகவும் வருமானம் குறைந்த தரப்பாக தோட்டத் தொழிலாளர்கள் இருப்பதால் இது குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டு முக்கிய முடிவுகளை அரசு எடுக்க வேண்டும்” - என்றார். (இ)

# முடியாவிட்டால் உடன் வீட்டுக்கு செல்லுங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்க சஜித் அணி தயார்

## அரசுக்கு வேலுகுமார் எம்.பி. எச்சரிக்கை

கண்டி, ஜன. 01

“முடியாவிட்டால் உடனடியாக வீட்டுக்கு செல்லுங்கள். நாட்டைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.”

- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

“நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஊழல், மோசடிகளும், தவறான முடிவுகளும், தெளிவற்ற கொள்கைளுமே பிரதான காரணங்களாகும். ஜனவரியில் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும்.

நாட்டு நிலைமை இவ்வாறிருக்க, அமைச்சர்கள் ‘அறிக்கைகளை’ வெளியிட்டு அரசியல் நடத்திவருவதுடன், உறுதியான அறிவிப்புகள் இன்றி ஊகங்களை வெளியிட்டு வருகின்றனர். சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்கின்றனர்.

இந்த நாட்டை பட்டினியை நோக்கி கொண்டு செல்லாதீர்கள் என அரசிடம் வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றோம். முடியாவிட்டால் உடனடியாக வீட்டுக்கு செல்லுங்கள். நாட்டை பொறுப்பேற்று நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது. அதற்கான கொள்கைத் திட்டங்கள் எம் வசம் உள்ளன” - என்றார். (இ)

# இம்மாதம் அமைச்சரவை மாற்றம் ஜனாதிபதியும் பிரதமரும் முடிவு!

## அமைச்சர் கெஹலிய கூறுகின்றார்



**கொழும்பு, ஜன. 01**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவை இந்த மாதம் மறுசீரமைக்கப்படக்கூடும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இந்தச் செய்தியை தெற்கு ஊடகங்கள் நேற்று வெளியிட்டுள்ளன.

அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இணக்கம் வெளியிட்டுள்ளார். அந்த மாற்றத்தை ஜனவரி 8 ஆம் திகதி நிகழ்த்துவதா அல்லது 18ஆம் திகதி நிகழ்த்துவதா என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

முக்கியமான சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், புதிய சிலருக்கும் வாய்ப்பளிக்கப்படவுள்ளது அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மலையகப் பிரச்னைகளை தேசிய, சர்வதேச மட்டங்களுக்கு உயர்த்துகின்றேன்

## தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 01

“இந்த நாட்டில் வாழும் வடக்கு, கிழக்கு, முஸ்லிம் தேசிய இனங்களுடன் கரம் கோர்த்து, சிங்கள சகோதர மக்களுக்கும் ஒரு செய்தியை சொல்லி, மலையக மக்களின் அபிலாஷைகளை தேசிய மற்றும் சர்வதேசிய மட்டங்களுக்கும் உயர்த்த வேண்டிய வரலாற்று கடமை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் எனக்கு இருக்கின்றது. சமீபத்து இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர்களின் விவகாரங்களை தொடர்ந்தும் தோட்ட, பிரதேச, மாவட்ட பிரச்னைகளாக மட்டும் முடக்காமல், ஏனைய சகோதர சமூகங்களது பிரச்சனைகளை போல் தேசிய மற்றும் சர்வதேசிய மட்டங்களுக்கு கொண்டு செல்வதே, இன்றைய தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கூட்டு செயல்பாட்டில் எங்கள் நோக்கங்களில் ஒன்றாக இருக்கின்றது. இதை சரியாக புரிந்துக் கொண்டு மலையக இளைய தலைமுறையும், படித்த தலைமுறையும் எமது கரங்களை பலப்படுத்த வேண்டும்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் இன்று (நேற்று) நடைபெறும் இறுதிச் சுற்று பேச்சுகளில் இனிய இறுதி முடிவு எட்டப்படும் என நான் நம்புகிறேன் எனவும் அவர் நேற்றுக் காலை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தெளிவுப்படுத்தியதாவது: -

“இந்தக் கூட்டு செயல்பாட்டில் நாம் இடம்பெறாமல் இருந்திருந்தாலும்கூட நான் இதை வேறு அடிப்படைகளை செய்தே இருப்பேன். ஐ.நா. அவைக்கு மலையக விவகாரங்களை கொண்டு செல்ல தீர்மானித்துள்ளேன் என நான் மூன்று மாதங்களுக்கு முன்பே சொன்னேன். இன்று இந்தியாவுக்கு ஞாபகப்படுத்தி, அமெரிக்கா, ஐரோப்பா, ஐ.நா. என சகோதர மக்களுடன் கரங்கோர்த்து மலையக மக்களும் பயணிக்க வேண்டிய காலம் உதயமாகி உள்ளது.

இன்றைய நடவடிக்கை இலங்கையின் உற்ற நட்பு நாடான இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவதில் ஆரம்பிக்கிறது. இந்நாட்டின் சமீபத்து இந்திய வம்சாவளி மக்களையும் சேர்க்காமல் அல்லது இந்திய வம்சாவளி மக்களின் பிரதான அரசியல் இயக்கத்தின் பங்கு பற்றல் இல்லாமல், இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுத முடியுமா?

ஆகவே, நாம் எங்கே இருக்க வேண்டுமோ, அங்கேயே இருக்கிறோம். அதுவும் நன்றாகவே இருக்கிறோம். நாம் எதை செய்ய வேண்டுமோ, அதையே செய்கிறோம். அதையும் நன்றாகவே செய்கிறோம். இந் நோக்கில் எம்முடன் கரம் கோர்க்கும் எவரையும் அரவணைக்க தயாராகவும் இருக்கிறோம்.

எழுபதுகளில் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான் தமிழ்க் கட்சிகளுடன் தமிழர் கூட்டணி கூட்டு தலைமையில் இடம் பெற்றார். வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுக்கும் நிலைமைக்கு ஈழத்தமிழ் உடன்பிறப்புகள் தள்ளப்பட்ட பிறகு, தன்னிலை விளக்கம் அளித்து அந்த கூட்டில் இருந்து நாகரிகமாக பெரியவர் தொண்டமான் விலகினார். அதே போல் பிற்காலத்தில் வட கிழக்கு சகோதரர்களின் தலைமையின் அழைப்பை ஏற்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் நண்பர் சந்திரசேகரனும், நானும் வடக்கு, கிழக்கு சகோதரத்துடனான எங்கள் உறவுகளை தொடர்ந்தும் கட்டி வளர்ந்து வந்தோம்.

கட்சி மாறுபாடுகளுக்கு அப்பால் பெரியவர் சௌமியமூர்த்தி தொண்டமானை நான் எப்போதும் மதிக்கிறேன். அவர் அன்று எடுத்த முடிவு சரியானதே. தனிநாடு என்ற இலக்கை மலையக தமிழ் மக்கள் ஏற்க முடியாது என அவர் முடிவெடுத்தார். அதேவேளை, பொது நோக்கங்களில் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் முடிவெடுத்து செயல்பட்டார்.

‘தனிநாடு’ என்பதால் கூட்டு செயற்பாட்டில் இருந்து தொண்டமான் விலகியதை கணக்கில் எடுப்பவர்கள், அவர் அதுவரை தமிழ் கட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டதையும் கணக்கில் எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் சௌமியமூர்த்தி தொண்டமான் கடைபிடித்த கொள்கைகளையே நானும் கடை பிடிக்கிறேன். அதேபோல் நண்பர் சந்திரசேகரன் கடைபிடித்த கொள்கைகளையே நான் கடைபிடிக்கிறேன். நானும் நேற்று பொது வாழ்வுக்கு வந்தவனல்ல. எனக்கும் இவை தொடர்பில் நீண்ட வரலாறு இந்நாட்டில் கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக இருக்கிறது.

இன்று எமது பொது நோக்கு நிகழ்ச்சி நிரலில் தனி நாடு என்ற இலக்கு இல்லை. ஆயுதப் போராட்டம் என்பதும் இங்கில்லை. எங்கள் தந்தை நாடான இந்தியா, எங்கள் தாய் நாடான இலங்கையுடன், பிரிபடாத நாட்டுக்குள் எங்கள் பிரச்னைகள் தொடர்பில் செய்துக்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்திகொண்ட கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என நாம் இன்று கோருகின்றோம். இது எமது பிரச்னைகளுக்கு முழுமையான அரசியல் தீர்வு அல்ல எனவும் கூறுகிறோம்.

இதை எப்படி சிங்கள மக்களுக்கு, சிங்கள மொழியில் எடுத்து கூற வேண்டும் என்பதும் எனக்கு தெரியும். இன்று மாகாண சபைகளை இடைநிறுத்தி ஆளுநர்கள் மூலம் இந்த அரசு அராஜகம் செய்வதும், ஒரு தேர்தல் மூலம் இந்த அரசுக்கு கடும் செய்தி ஒன்ற சொல்ல சிங்கள மக்கள் காத்திருப்பதும் எனக்கு தெரியும். ஆகவே இதையிட்டு எவரும் கலவரமடைய தேவையில்லை” - என்றார். (இ)




## ஜனவரியில் 15 வீத விமான சேவைகளை ரத்து செய்யும் கனடாவின் வெஸ்ட்ஜெட்!

மொன்றியல், ஜன. 01
கனடாவின் வெஸ்ட்ஜெட் எயார்லைன்ஸ் ஜனவரியில் அதன் திட்டமிடப்பட்ட விமான சேவைகளில் 15 வீதத்தை இரத்துச் செய்யவுள்ள தாக அறிவித்துள்ளது.

வேகமாகப் பரவி வரும் ஒமைக்ரோன் திரிபு காரணமாக தனது பணியாளர்களை முழு மையாகப் பணிக்கமர்த்த முடியாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அதிகரித்த கொரோனா பரவல் மற்றும் கடும் குளிர் காரணமாக ஏற்கனவே பல விமான சேவைகளை அல்பர்ட் டாவின் கல்கரியை தலைமை யிடமாகக் கொண்ட தனியா ருக்குச் சொந்தமான வெஸ்ட் ஜெட் இரத்துச் செய்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கோவிட்-19 காரணமாக 181 வெஸ்ட்ஜெட் ஊழியர்கள் தற் போது விடுமுறையில் உள்ளனர் என நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மோர்கன் பெல் தெரிவித்துள்ளார்.

வெஸ்ட்ஜெட் ஒரு நாளைக்கு 450 விமானங்களை இயக்குகிறது. இந்நிலையில் ஜனவரியில் கிட்டத்தட்ட 68 விமானங்களை அந்த நிறுவனம் இரத்துச் செய்யவுள்ளது. அத் துடன், கடும் குளிரான கால நிலை காரணமாக சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான சேவைகளில் மேலும் பாதிப்புக் கள் ஏற்படலாம் எனவும் வெஸ்ட்ஜெட் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரி வித்தார். (அ)




## தென்னாபிரிக்காவில் தணியும் ஒமைக்ரோன்

### இரவு ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகள் நீக்கம்

கேப்ரவுண், ஜன. 01
ஒமைக்ரோன் திரிபு பரவ லால் தீவிரமடைந்த கோவிட் -19 தொற்று நோயின் நான் காவது அலையின் உச்சத்தை தென்னாபிரிக்கா கடந்திருக்க லாம் என அந்நாட்டு அதி காரிகள் தெரிவித்தனர்.

தொற்று பரவல் குறைவ டைந்து வரும் நிலையில் நாடு முழுவதும் விதிக்கப்பட்டிருந்த இரவு நேர ஊரடங்கு உத்தர வையும் தென்னாபிரிக்கா நீக்கி யுள்ளது.

ஒமைக்ரோன் திரிபு மிகவும் தீவிரமாகப் பரவக்கூடியதாக இருந்தாலும் முந்தைய அலை களுடன் ஒப்பிடுகையில் நான் காவது அலையில் மருத்துவ மனைளில் அனுமதி வீதம் குறைவாக இருந்ததாக தென் னாபிரிக்க அரசாங்கம் தெரிவித் துள்ளது.

இந்த அலையில் இறப்பு எண்ணிக்கையிலும் சிறிய அதி கரிப்பே ஏற்பட்டதாகவும் சுகா தார அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

ஒமைக்ரோன் புதிய திரிபு கடந்த மாதம் தென்னாபிரிக் காவில் முதன்முதலில் கண் டறியப்பட்டது. இது உலகெங் கும் வேகமாகப் பரவி பரவ லான கட்டுப்பாடுகளுக்கு வழிவகுத்தது.

இந்நிலையில் டெல்டா மற்றும் ஒமைக்ரோன் திரிபு களின் கலவையானது மிகத் தீவிரமாக பரவி ஆபத்தான சுனாமி போன்ற கொரோனா அலையை உலகெங்கும் ஏற்ப டுத்தி வருவதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட் ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார்.

எனினும் ஒமைக்ரோன் முதன்முதலில் கண்டறியப் பட்ட தென்னாபிரிக்கா, தங்கள் நாட்டில் இந்தத் திரிபால் ஏற் பட்ட நான்காவது அலையின் தீவிரம் தணிந்து வருவதாகத் தெரிவித்து இரவு நேர ஊர டங்கு உள்ளிட்ட சில கட்டுப் பாட்டு விதிகளை தளர்த்தி யுள்ளது.

தென்னாபிரிக்காவில் டிசெம்பர் 25 ஆம் திகதியுடன் முடிவடைந்த 7 நாட்களில் தினசரி சராசரி தொற்று நோயாளர் தொகை 89,781 ஆக இருந்தது. அதற்கு முந்தைய வாரத்தில் இந்தத் தொகை 127,753 ஆக இருந்தது.

தென்னாபிரிக்காவில் இது வரை கிட்டத்தட்ட 3.5 மில் லியன் கோவிட் -19 தொற்று நோயாளர்கள் பதிவானதுடன், 90,000 க்கும் அதிகமான இறப்புகள் பதிவாகியுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்கா-ரஷ்யா உறவை புதிய தடைகள் பாதிக்கும்!

### பைடனிடம் எடுத்துரைத்தார் புடின்

நியுயோர்க், ஜன. 01
உக்ரைன் விவகாரத்தில், அமெரிக்கா-ரஷ்யா மீது புதிய தடைகளை விதித்தால் அது இருநாடுகளுக்கு இடையில் உள்ள உறவுமுறை கடுமையாக பாதிக்கப்படும் என ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின், அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை எச்சரித்துள்ளார்.

இருநாட்டு ஜனாதிபதிகளுக் கும் இடையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கிட் டத்தட்ட சுமார் 50 நிமிடங்க ளுக்கு மேல் இடம்பெற்ற தொலைப்பேசி உரையாட லின்போது, புடின் இதனைத் தெரிவித்தார்.

பிற்பகல் 3.35 மணிக்குத் தொடங்கி 4.25 வரை இந்தப் பேச்சு நீடித்ததாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரி வித்தனர்.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளைக் குவித்த தால் அங்கு நிலவும் பதற்றமான சூழல் குறித்து இரு தலைவர்க ளும் ஆலோசனை நடத்தினர். பதற்றத்தைத் தணிக்க நடவ டிக்கை எடுக்குமாறு ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.



புத்தாண்டில் ரஷ்யா-அமெ ரிக்கா இடையே அரச முறை பேச்சுகள் தொடங்க உள்ள தைக் குறித்தும் இரு தலைவர்க ளும் விவாதித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித் துள்ளது.

உக்ரைன் பதற்றத்தைத் தணித்த பிறகுதான் இருதரப்பி லும் சுமுகமான பேச்சுக்கான சூழல் உருவாகும் என்றும் ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார். இரு தலைவர்களும் விரைவில் காணொளி வாயிலாக கலந்து பேச இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது

அதே அழைப்பில் ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுத் தால், அமெரிக்காவும், அதன் கூட்டாளி நாடுகளும் தக்க பதிலடி கொடுக்கும் ஜோ பைடன் என கூறியுள்ளார்.

உக்ரைனின் கிழக்கு எல்லை யில் சுமார் ஒரு லட்சத் துக்கும் அதிகமான ரஷ்ய துருப்புகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக உக் ரைன் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் ரஷ்ய தரப்போ தன் நாட்டு எல்லைக்கும் தன் துருப் புகளை எங்கு வேண்டுமானா லும் நகர்த்திக் கொள்ள தங்க ளுக்கு சுதந்திரமிருக்கிறது என கூறுகின்றது, மேலும் உக்ரைன் மீது படையெடுக்க எந்தவித திட்டமும் இல்லை என்றும் மறுத்துவருகிறது.

உலகின் இரு முக்கிய நாட்டு ஜனாதிபதிகள் பேச்சு நடத்து வது இந்த மாதத்தில் இது இரண்டாவது முறை என்பது நினைவுகூரத்தக்கது. (அ)

# சீனத் தாயகத்துடன் இணைவதைத் தவிர தாய்வானுக்கு வேறெந்த வழியும் இல்லை

### வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ

பீஜிங், ஜன. 01
சீனத் தாயகத்துடன் மீண் டும் இணைவதைத் தவிர தாய் வான் பிராந்தியத்துக்கு வேறு எந்த வழியும் இல்லை என சீனா தெரிவித்துள்ளது.

இது குறித்து சீன வெளியுற வுத்துறை அமைச்சர் வாங் யீ கூறுகையில்-

தாய்வானுக்கு சுதந்திரம் கேட்கும் சக்திகளை அமெ ரிக்கா ஊக்குவித்து வருகிறது. இதன் காரணமாக தாய்வானை அமெரிக்கா ஆபத்தான நிலைக் குக் கொண்டு செல்கிறது.

இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்காவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். தாய்வான் தொடர்பான அமெரிக்காவின் செயல்களுக்காக, அந்த நாடு தாங்க முடியாத விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

சீனத் தாயகத்துடன்



மீண்டும் இணைவதைத் தவிர தாய்வான் பிராந்தியத்துக்கு வேறு எந்த வழியும் இல்லை- என்றார்.

சீனாவில் கடந்த 1949இல் நடந்த உள்நாட்டுப்போருக்கு பிறகு தாய்வான் தனிநாடாக உருவானது. ஆனாலும் தாய் வான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அரசாங்கம் கூறி வருகிறது

எனினும் தாய்வான், சீனா வின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜனநாயக முறையிலான அரசாங்கம் தான் அங்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.

ஆனால், தேவை ஏற்பட் டால் சீனக் கடற்கரையில் இருந்து சுமார் 200 கி.மீ. தொலைவில் உள்ள தாய் வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்கமாட்டோம் என சீனா மிரட்டியும் வருகிறது.

இந்த சூழலில் கடந்த 72 ஆண்டுகளில் இல்லாத அள வுக்கு சீனா- தாய்வான் இடை யிலான இராணுவ பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனிடையே, எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் தங்கள் நாட்டை சீனா ஆக்கிரமிக்கக் கூடும் என்று தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சர் சியு குவோ-செங்கும் அச்சம் தெரிவித்துள்ளார். (அ)




## ஐஸ் ஹொக்கி விளையாடினர் ரஷ்ய-பெலாரஸ் ஜனாதிபதிகள்

மொஸ்கோ, ஜன. 01
ரஷ்ய ஜனாதிபதி புட் டின், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷெ ன்கோவும் சென்.பீற்றர்ஸ் பேர்க்கில் இராஜாங்க ரீதியி லான பேச்சுவார்த்தை நடத் திய பிறகு ஐஸ் ஹொக்கி விளையாடியுள்ளனர்.

நட்பு ரீதியாக, உள்ளூர் ஹாக்கி அணியுடன் இணைந்து, இருவரும் ஒரே அணிக்காக விளையாடிய நிலையில் அதிபர் புடின் 7 கோல்களையும், அதிபர் லூ காஷென்கோ 2 கோல்களும் அடித்தனர். இறுதியில் அவர்களது அணி 18-7 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (அ)

# புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள்

## மாற்றத்துக்கான புத்தாண்டாக மாற்றுவதற்கு அணிதிரள்வோம்!



மலர்ந்துள்ள புத்தாண்டு, எதிர்காலத்தைப் புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கை மற்றும் உறுதியுடனும் பார்க்கத் தூண்டியிருக்கிறது. அதனால், 2022ஆம் ஆண்டை, மிகுந்த ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் வரவேற்போம்.

நாட்டின்மீதும் எமது சமூகத்தின்மீதும் கடந்த ஆண்டு ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். எதிர்காலப் புத்தெழுச்சிக்காக நாம் உறுதியுடன் இருக்க வேண்டுமென்று நான் நினைக் கின்றேன்.

இந்தச் சவால்களைத் தொடர்வதற்கும் வெற்றிகொள்வதற்கும், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தொற்றுப் பரவல் காரணமாக முடங்கியுள்ள பொருளாதாரம், இயல்பு வாழ்க்கை என்பன இதன் மூலம் பாதுகாக்கப்படும். அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் செயல்படுத்த எம்மால் முடியும். தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலமே அவ்வாறான எழுச்சியை நோக்கிப் பயணிக்க முடியும். வெற்றிகொண்ட சவால்களைப் போன்றே, பெற்றுக்கொண்ட அனுபவங்களும் இப்புத்தாண்டில் நம்மை ஊக்குவிக்கும்.

உலகளாவிய தொற்றுப் பரவலானது, பொதுமக்களின் அபிலாஷைகளை அடைவதற்கான முன்னேற்றத்தை மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது. இவ்வாறான நிலைமையிலும், தேசிய பாதுகாப்பு மற்றும் சக வாழ்வு என்பன நிலைநாட்டப்பட்டுள்ளன. மக்களைப் பாதிப்படையச் செய்யும் அடிப்படை யற்ற அரசியல் போராட்டங்கள், நாட்டை நேசிக்கின்ற பெரும்பான்மையான மக்களால் நிராகரிக்கப்பட்டு உள்ளமையானது, அரசாங்கத்தின்மீது அம்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்துள்ளது.

மலர்ந்துள்ள புத்தாண்டை, மக்களுக்கான 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தை அடைந்துகொள்வதற்காக அர்ப்பணித்து, மாற்றத்துடன்கூடிய புத்தாண்டாக மாற்ற அணிதிரளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டு, உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் தைரியமிக்கதுமான புத்தாண்டாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ**
*ஜனாதிபதி*

## அனைவரின் பிரார்த்தனையும் 2022ஆம் ஆண்டில் நிறைவேறட்டும்



வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளை அனுபவித்து, மிகுந்த வலிமையுடன் எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு உதயமாகியுள்ள இந்தப் புத்தாண்டில் உறுதிகொள்வோம்.

உலகளாவிய தொற்று நிலைமைக்கு முகங்கொடுத்து கடந்த ஆண்டில் இலங்கை முகங்கொடுத்த சவால்கள் பலவாகும். சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான சவால்களை வெற்றி கொள்வதற்கு ஒரு நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றிய அர்ப்பணிப்பை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மக்களின் பாதுகாப்புக்காகவே கடந்த ஆண்டில் முன்னுரிமை வழங்கியிருந்தோம். தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் ஊடாக உங்கள் அன்புக்குரியவர்கள் உள்ளிட்ட ஆயிரக்கான நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க எமக்கு முடிந்தது.

நாட்டில் இவ்வாறான எவ்வித சவால்களும் காணப்படாத காலப்பகுதியில் கைவிடப்பட்ட பல திட்டங்களை நாம் செயற்படுத்தி அவற்றை கடந்த காலங்களில் மக்களின் பயன்பாட்டிற்காக கையளித்துள்ளோம்.

தொற்று நிலைமைக்கு மத்தியிலும் அந்த எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும் இடைநிறுத்தாது, மக்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்பி அபிவிருத்தி ஒளியை முழு நாட்டிற்கும் பரப்புவதே எமது அரசாங்கத்தின் எதிர்கால இலட்சியமாகும்.

அதற்காக சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக எம்மத்தியில் காணப்படும் பல்வேறு தடைகளை முறியடிக்க வேண்டும். ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதற்கு பதிலாக சரியானதை தெரிவுசெய்து அதற்காக செயல்படுவதன் ஊடாக தற்போது காணப்படும் பல்வேறு பிரச்னைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

நாம் நாட்டின் பிரச்னைகளை விமர்சிப்பவர்கள் அல்ல நடைமுறைச் சவால்களுக்கான தீர்வுகளை உங்களுக்கு வழங்குபவர்கள். அதற்காக நீங்கள் அனைவரும் எதிர்பார்க்கும் புதிய பாதை இன்று உதயமாகும் புத்தாண்டில் வெளிப்படுத்தப்படும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து தடைகளை முறியடித்து வாழ்வை வெல்லும் ஆண்டாக இப்புத்தாண்டை உருவாக்குவோம். அதற்கு ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கு பலமாக விளங்குவதற்கு உறுதியாக அர்ப்பணிப்புடன் செயல்படுவதை நான் நம்பிக்கையும் தெரிவிக்கின்றேன்.

இப்புத்தாண்டில் இலங்கை மக்கள் அனைவரின் புதிய எதிர்பார்ப்புகளும் பிரார்த்தனைகளும் நிறைவேற வாழ்த்துகிறேன்.

**மஹிந்த ராஜபக்ஷ**
*பிரதமர்*

## புதிய நம்பிக்கையுடன் வாழுங்கள்!



உலகம் 2021 ஆண்டுகள் நிறைந்து 2022இல் புத்தாண்டு பிறக்கிறது என்று இதயம் பொங்கி மகிழும் மக்கள் கொண்டாடும் புத்தாண்டு வாழ்க என வாழ்த்தி நிற்கின்றோம்.

எல்லோரும் எதிர்காலம் சிறந்த வாழ்வைத் தருமென்று புதிய நம்பிக்கையுடன் புத்தெழுச்சியுடன் இதயம் பொங்கிவாழ வேண்டுமென வாழ்த்துகிறோம்.

2021 பிறந்தபொழுது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் நோய் தொற்றால் இலட்சோப இலட்சம் மக்கள் உயிர்களைப் பறிகொடுத்தும், உயிர்களுக்காகப் போராடிக் கொண்டுமிருந்தனர்.

தினமும் பசியால் பட்டினியால் வாழ்விழந்த மக்கள் பெருக்கமும், நோயில் வீழ்ந்து உயிருக்காகப் போராடும் மக்களும், அடிமைத்தளை அறுத்துச் சுதந்திரமாய் ஆளும் நாடுகளும், மக்கள் விடுதலைக்காக பிளவுற்றும் உயிர்கொடுத்தும் விடுதலைக்காய் போராடுவோருமாய் உலகம் இருண்டும் கிடக்கிறது.

இலங்கையிலும் கிடைத்த சுதந்திரமும் இழந்து, ஆளும் ஆட்சிகளுக்குள், இராணுவமய நிர்வாகத்துள் இலங்கைத் தமிழ் மக்களும் அடிமைத்தளையறுக்கும் விடுதலைக்கும் ஜனநாயகத்திற்கும் ஆளும் உரிமைக்கும் வாழும் உரிமைக்குமாய் போராடும் மக்களாய் வாழ்கின்றனர் -போராடுகின்றனர்.

அதனால்தான் 2022இலாவது நம்பிக்கை இழந்து போகாது புதிய நம்பிக்கை பிறக்கவேண்டுமென வாழ்த்துகிறோம். 2022இலும் புதிய உலக ஒழுங்குகளில் பாரிய உலக ஒழுங்கு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் வலிந்து வருகின்றன. இதற்கான அரசியல், போர்க் கொந்தளிப்புக்களும் இந்துமாசமுத்திரப் பிராந்தியம், தென்சீனக்கடல் பிராந்தியம், ஆசிய பசுபிக் சமுத்திரப் பிராந்தியங்களில் வல்லாண்மை ஆதிக்கப் போட்டிகள் வலுப்பெற்றிருக்கின்றன.

இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய சீன வல்லாண்மைப் போட்டிகள் அமெரிக்க இந்திய அவுஸ்திரேலிய ஜப்பான் கூட்டுப் பாதுகாப்பு முன்னெடுப்புக்கள் இதனிடையே இலங்கையில் தமிழர் தாயகப் பிராந்தியம் விடுதலைக்கான சவால்களை எதிர்நோக்கியுள்ள நிலைமைகளை தமிழர் தாயக மக்கள் முன்னுள்ளன. இலங்கையில் சிங்கள பௌத்த - பெரும்பான்மைத்துவ அடிப்படைவாத இராணுவ நிர்வாகத்துவ ஆட்சிக்கெதிரான ஜனநாயக அரசியல் ஆட்சிக்கான நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் முன்னெடுப்பதும் அவசியமாகின்றது. இயேசு பிரான் பிறப்போடு நத்தார் கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக மதங்களின் நல்லிணக்கத்துடன் புத்தாண்டை வரவேற்பதோடு தை பிறந்தால் நல்வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டு வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

**மாவை சோ. சேனாதிராசா**
*தலைவர், இலங்கை தமிழ் அரசுக் கட்சி*

# புதிய ஆண்டில் புதியன செய்வோம்!

இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் வேகமாக கடக்கிறது. உலகம் நோய்களின் சீற்றத்தால் அல்லல்படுகிறது. விஞ்ஞானத்தின் விந்தைகள் ஆச்சரியத்தை தந்த போதிலும் இயற்கையை எவராலும் வெல்லமுடியவில்லை. இயற்கையே இறைசக்தி, இறைவனை அனைவரும் மன்றாடி வழிபாடு செய்யுங்கள்.

இந்த இனிய பிறப்பை நல்லவண்ணம் வாழ்ந்து எமக்கும், பிறருக்கும் நன்மைகளைத் தேடுவோமாக. முகத்தை எவ்வளவோ அலங்கரித்த மனிதன் இன்று கண்ணுக்கு தெரியாத கிருமிக்கு அச்சப்பட்டு முகக்கவசம் அணியும் நிலை ஏற்பட்டுவிட்டது. இந்நிலை மாறவேண்டும் உலகம் முழுவதும் நாம் நின்மதியாக வாழும் நிலை உருவாக வேண்டும். இதற்காக இன்றைய நாளை நன்றாக பிரார்த்தனை செய்வோம்.

அழகான இலங்கை திருநாடு அறத்தை தொலைத்ததனால் அல்லல்களை அனுபவிக்கின்றது. என்று தர்மம் பிழைக்கிறதோ அதன் பின் எல்லாம் பிழைத்துவிடும். இன்று எம் மண்ணில் போரில்லை. ஆனால், பொருளாதரம் பலமிழந்து நாளை என்னவாகுமோ என்று அச்சத்தோடு அனைவரும் வாழ்கின்றார்கள். எம்மண்ணில் தர்மம் பிழைக்க வேண்டும். பஞ்சமின்றி அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் நீதியோடு அனைவரும் நின்மதியாக வாழவேண்டும். இவ் வேண்டுகோள்களை இந்நாளில் அனைவரும் இறைவனிடம் வேண்டுவோம்.

"கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந் தன் என கம்பராமாயணம் கூறியது. இன்று இலங்கை கடன் தொல்லையில் கதிக லங்கி விதியின்றி எவரிடமும் கையேந்தி காத்திருக்கிறது. இது நாட்டுக்கு மட்டுமல்ல நமக்கு எல்லோருக்கும் பாடமாக அமைந்துள்ளது. நாடு நல்லாய் இருந்தால்தான் நாம் எல்லோரும் நல்லாய் இருக்க முடியும். நாட்டுக்காக அனைவரும் பிரார்த்திப் போம். ஆடம்பரமான, அர்த் தமற்ற காரியங்களை நிறுத்து வோம். கடின உழைப்பினால் எம்மை நோக்கிவரும் இடர்களை வெல்வோம். அன்பான உறவுகளே கடந்து சென்ற ஆண்டில் நாம் விட்ட தவறுகளை நினைந்து கடவு ளிடம் மன்னிப்பு கேட் போம். புதிய ஆண்டில் புதியவை செய்யப் புறப் படுவோம்.



காலம் மிகவும் பெறுமதியானது உயிருக்கு சமமானது. எனவே புதிய ஆண்டில் அனைவரும் நல்ல திட்டமிடல்களோடு நல்லவண் ணம் வாழ முற்படுவோம்.

பிறரை குறை கூறுவதை விடுத்து நாம் என்ன செய்தோம் என நமக்குள்ளே எழுப்பி சாதிக்க தயாரா வோம். புதிய ஆண்டில் அனைவரும் சகல வளங் களோடும் சிறப்பாக வாழ துர்க்கை அம்மனைப் பிரார்த்தித்து. அனைவருக் கும் நல்லாசிகளையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செஞ்சொல்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்.**
தலைவர்- தெல்லிப்பழை
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தவைவர் -சிவபூமி அறக்கட்டளை.

### அடுத்த மூன்று வாரங்களும் அவதானமிக்கவை!

# பூஸ்டரை செலுத்திக்கொள்வதில் மக்களுக்கு ஆர்வம் இல்லை என்கின்றார் சமித்த கினிகே

கொழும்பு, ஜன. 01

அடுத்து வரும் மூன்று வாரங்களும் அவதானமிக்க வாரங்கள் என்பதால் பொதுமக்கள் பொதுச் சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி நடப்பது அவசியம் என்று தொற்றுநோய் பிரிவின் வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பொதுமக்கள் பொதுச் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் நாடு மீண்டும் அபாயகரமான நிலைமைக்கு ச் செல்லும்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் திருப்தியளிக்கின்றன. எனினும், இந்த நிலைமையைத் தொடர்ந்து பேணுவதற்கு, தடுப்பூசி செலுத்துவதைத்



தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கொரோனாத் தடுப்புக்கான மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் மக்களின் ஆர்வம் குறைவாகவே உள்ளது. குறிப்பாக இளைஞர், யுவதிகள் ஆர்வம் செலுத்தவில்லை.

இது ஆபத்தான நிலை. முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் மூன்று மாதங்களின் பின்னர் மூன்றாவது தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள வேண்டும். மக்கள் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்று தொற்று நோய் பிரிவு கோரிக்கை விடுக்கின்றது.

தற்போதைய நிலையிலும் கூட கொரோனா வைரஸ் பரவும் அபாயம் நீங்கவில்லை. எனவே, பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றுவது அவசியமாகும்” - என்றார்.

(கே)



# வாகனம் விபத்து; 5 பேர் படுகாயம்!

கொழும்பு, ஜன. 01

ஹப்புத்தளை, ஹல்துமுல்ல பகுதியில் நேற்று அதிகாலை கப் ரக வாகனமொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

பெல்மடுலையிருந்து, நுவரெலியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கப் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்த ஐவரில் நால்வர் ஹல்துமுல்ல வைத்திய சாலையிலும், மேலும் ஒருவர் தியத்தலாவை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் ஹல்துமுல்ல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ)

# ரோஸியின் கார் வாடகை மாதம் ஐந்து லட்சம் ரூபா

கொழும்பு, ஜன. 01

கொழும்பு மாநகர சபையின் மேயர் ரோசி சேனநாயக் கவுக்கு வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுப்பதற்காக மாதாந்தம் 500,000 ரூபாவை ஒதுக்கக் கொழும்பு மாநகர சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை அவர் பயன்படுத்திய உத்தியோகபூர்வ கார் பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், வேறு வாகனம் வாடகைக்கு எடுக்கப்படும் என்றும் மேயர் தெரிவித்தார்.

செலவுகளைக் குறைக்க வேண்டிய நிலையில், அதிக விலைக்கு வாகனங்களை வாடகைக்கு எடுப்பதை ஏற்க முடி யாது என எதிர்க்கட்சி எம்.பிக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்பை ஏற்றுக் கொள்வதாகவும், மாற்று வழி இல்லாத காரணத் தினால் விருப் பமின்றி அதைச் செய்ய நேர்ந்த தாகவும் சேன நாயக்க கூறினார்.

# மதுப் போத்தல்களில் பாதுகாப்பு ஸ்டிக்கர்

கொழும்பு, ஜன. 01

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபான போத்தல்களில் பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுவது கட்டாயமாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுவரி திணைக்களம் உத்தியோகபூர்வ அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. சட்ட விரோத மதுபான விற்பனையைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் மதுவரி திணைக் களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# விமல், வாசு, கம்மன்பில மூவரும் கூட்டு நாடகம்!

### சாடுகின்றது ஜே.வி.பி.



**கொழும்பு, ஜன. 01**

**“அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகிய மூவரும் நாடகம் அரங்கேற்றி வருகின்றனர்.”**

- இவ்வாறு ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“யுகதனவி ஒப்பந்தத்துக்கு அமைச்சர்கள் மூவரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். உண்மையாலுமே அரசிலிருந்து வெளியேறிதான் அவர்கள் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு வெளியேறமாட்டார்கள். அதேபோல் ஜனாதிபதியும் அவர்களை நீக்கமாட்டார். இவர்கள் எல்லாம் இணைந்து மக்களை ஏமாற்ற நாடகம் அரங்கேற்றிவருகின்றனர்” - என்றார். அதேவேளை, அரசிலிருந்து வெளியேறும் எண்ணம் தம் மிடம் இல்லை என மேற்படி மூன்று அமைச்சர்களும் அறிவித் துள் ளமையும் குறிப்பிடத்தக்கது.

(இ)



# மீண்டும் டில்லி பறக்கும் பஸில்

கொழும்பு, ஜன. 01

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இம்மாதம் 09 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

குஜராத் பூகோள மாநாடு எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பங்கேற்கவே நிதி அமைச்சர் பஸில் புதுடில்லி செல்லவுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் நிதி அமைச்சர் இந்தியா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பதில் பிரதமராகுகின்றாரா பஸில்?

கொழும்பு, ஜன. 01

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைப் பதில் பிரதமராக நியமிப்பது தொடர்பில் அரச தரப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்லவுள்ளார் எனவும், சிகிச்சைகளின் பின்னர் சுமார் ஒரு மாதம் வரை அவருக்கு கட்டாய ஓய்வு தேவைப்படுவதாலும் பதில் பிரதமர் நியமனம் குறித்து கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது.

இதற்கு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமை கொண்டவர். எனவே, அவருக்குப் பதில் பிரதமர் பதவியை வழங்குவதில் உள்ள சட்டரீதியிலான சிக்கல்கள் குறித்தும், அரசியல் ரீதியில் எழும் எதிர்ப்புகள் பற்றியும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. (இ)

# ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜன. 01

ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 05/2021இன் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தால் 2022ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுபற்றிய விவர சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது என ஓய்வூதியத் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் எ.ஜகத். டி.டயஸ் நேற்று அறிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டுக்கான மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் பின்வரும் திகதிகளில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பெப்ரவரி 10ஆம் திகதி வியாழக்கிழமை, மார்ச் 10ஆம் திகதி வியாழக்கிழமை, ஏப்ரல் 08ஆம் திகதி வெள்ளிக் கிழமை, மே 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, ஜூன் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஜூலை 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஓகஸ்ட் 10ஆம் திகதி புதன் கிழமை, செப்ரெம்பர் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஒக்ரோபர் 06ஆம் திகதி வியாழக் கிழமை, நவம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை, டிசெம்பர்09ஆம் திகதி வெள்ளிக்கிழமை. (இ)

## இன்னுமோர்...

கொடுக்கத் தயாரில்லை என்று இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று அரசியல் அதிகாரம் கைகளில் உள்ளதன் காரணமாகவே தமது சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடிகிறது என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலர் பிரிவில் வாழ்வாதார மற்றும் மைதான அபிவிருத்திக்கு நிதியுதவியை நேற்று வழங்கி வைத்தபின் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், கடந்த மூன்று தசாப்தத்துக்கு மேற்பட்ட காலமாக ஆளும் தரப்பில் தமிழ் மக்கள் சார்பாக மக்கள் பிரதிநிதிகள் இருந்தது என்பது மிகவும் அரிதான விடயமாகும். அதனால், கடந்த காலத்தில் அரசியல் அதிகாரம் இல்லாத சமூகமாகவே நாங்கள் இருந்துவந்துள்ளோம். அந்த அரசியல் அதிகாரம் இல்லாத காரணத்தால் தமிழ் சமூகம் பல வழிகளில் சுரண்டப்பட்டுள்ளது.

அதிகாரிகள் இன்று இரவு பகல் பாராமல் தங்களது வேலைநேரக் கடமைக்கு அப்பால் சென்று விடுமுறைகள் என்று பாராமல் எந்தவித இனவாத, மதவாத நோக்கமில்லாமல் உளச் சுத்தியுடன் கடமையாற்றிவரும் நிலை யில் மாவட்ட அரசாங்க அதிகாரிகளை அரச பயங்கரவாதம் என்று சொல்கின்ற கீழ்தரமான அரசியலை சிலர் மேற்கொள்கின்றனர்.

அரசியல் அதிகாரம் என்பது இன்று எங்கள் கைகளிலும் இருக்கின்றது. அதன் காரணமாகவே இன்று எமது சமூகத்திற்கு விரோதமான நடவடிக்கைகளை முடிந்தளவுக்கு தடுத்து நிறுத்தி வருகின்றோம். ஆளும் தரப்பில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

இந்த மாவட்டத்தில் உள்ள மக்களுக்கான மூன்று விதமான பிரச்னைகள் உள்ளன. இந்த மூன்று விதமான பிரச்னைகளுக்கும் இராஜதந்திரமான அணுகல்களை மேற்கொண்டு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே எங்கள் அரசியல் பயணமாகும். இதில் எந்தவித மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லாமல் மிகவும் தெளிவாகயிருக்கின்றோம் - என்றும் அவர் கூறினார்.

## யாழ்ப்பாணத்தின்...

என்று சுட்டிக்காட்டியிருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, இந்தியாவுடன் பேணப்பட்டுவரும் தொடர்புகளால் சந்தேகமடைந்திருக்கும் சீனா கடந்த 10 வருடகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி செயல்திட்டங்கள் குறித்து மதிப்பீடு செய்வதற்கென அதன் தூதரகத்தின்கீழ் விசேட குழுவொன்றை நியமித்திருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் விஜிதமுனி சொய்சா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது வடக்கில் மூன்று தீவுகளை இந்தியாவிற்கு வழங்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அவற்றில் நெடுந்தீவும் உள்ளடங்குகின்றது. நான் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்தபோது நாட்டில் கைவிடப்பட்ட பகுதிகளில் காணப்பட்ட குதிரைகளைப் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்தேன்.

குறிப்பாக நெடுந்தீவில் மிகவும் உயரமாகக் காணப்பட்ட குதிரைகள், காலநிலை உள்ளடங்கலாக காலப்போக்கில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களால் உயரம் குறைந்தவையாக மாறிவிட்டன. எனவே, வனஜீவராசிகள் சட்டத்தின் ஊடாக அவற்றை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருந்தன.

அவ்வாறிருக்கையில் அந்தத் தீவை எவ்வாறு பிறிதொரு நாட்டிற்கு வழங்கமுடியும்? எனவே இவ்விடயத்தில் சூழலியலாளர்கள் தலையீடு செய்யவேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று நாட்டிற்குச் சொந்தமான எண்ணெய் குதங்களை இந்தியாவிற்கு விற்பனைசெய்து, அதற்குப் பதிலாக மூன்று மாதகாலத்திற்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது. ஆனால், மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்னர் நாட்டிற்கு எரிபொருளும் கிடைக்காது. நாட்டிற்குச் சொந்தமான எண்ணெய் குதங்களும் இந்தியாவிற்குச் சொந்தமாகிவிடும். இதனால் நாட்டிற்குக் கிடைக்கின்ற பயன் என்ன?

மேலும், அரசாங்கம் இந்தியாவுடன் மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களாலும் பேணிவரும் தொடர்புகளாலும் சந்தேகமடைந்திருக்கும் சீனா, கடந்த 10 வருடகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கென சீனத் தூதரகத்தின்கீழ் விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

எனவே எதிர்வருங்காலங்களில் சீனா இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கமுடியாது என்று குறிப்பிட்டார். (ஐ)

## தமிழ் - முஸ்லிம்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தேசிய இனப்பிரச்னையால் சிங்கள மக்களைவிட வடக்கு, கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் - முஸ்லிம்களுக்கிடையில் திட்டமிட்ட வகையில் இன முறுகலை ஏற்படுத்தி சிங்களக் கடும் போக்குவாதிகள் நாட்டின் அரசியலை முன்னெடுத்த கடந்த வரலாற்றை நாம் மறந்திட லாகாது.

தமிழ், முஸ்லிம் மக்கள் இனத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். அதனால்தான் நாம் இரு இனத்தவர்களையும் தமிழ்பேசும் மக்கள் என்று அழைக்கின்றோம். அதேபோல்தான் வடக்கு - கிழக்கைத் தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்று இலங்கை அரசிடமும் சர்வதேச சமூகத்திடமும் வலியுறுத்தி வருகின்றோம்.

எனவே, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வென்றெடுக்கத் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை காலத்தின் கட்டாய தேவையாகும். குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் கடந்தகாலத் துன்பியல் நிகழ்வுகளை மறந்துவிட்டு தீர்வை வென்றெடுக்க ஓரணியில் பயணிக்க வேண்டும். இதன் அவசியத்தை உணர்ந்து முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்” - என்றார். (இ)

## இந்திய மீனவர்கள்...

சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மயிலிட்டித் துறைமுகத்தில் ஒன்றுகூடிய மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துமீறும் இந்திய மீனவர்களை கைது செய், கைது செய்கின்ற படகுகளை அரசுடைமையாக்கு போன்ற கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்.

கொட்டும் மழையிலும் கடற்தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## 15 ஆயிரத்தை...

தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 17 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று அரசாங்க தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியது.

11 ஆண்களும் 06 பெண்களும் இவ்வாறு உயிரிழந்தனர். இதனால், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,979 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## மலேரியா...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை 2016ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத் தொற்று பரவவில்லை. எனினும் கடந்த ஆண்டுகளில் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியாத்தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர் நோக்கும் மிகப் பெரிய சவாலாகும்.

கடந்த சிலவாரங்களில் மலேரியா தொற்றுடன் இருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களாவர். மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்புகள் பெருமளவாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. மேலும் அண்மைக்காலங்களாக நகர்ப்புற மலேரியாவை பரப்பக் கூடிய அனோபிலிஸ் ஸ்டெபென்சி வகை நுளம்புகளும் எமது பிரேதேசங்களில் காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையானது மலேரியா நோயை ஏற்படுத்தும் பிளாஸ்மோடியம் வகை ஒட்டுண்ணிகளை மனித உடலிலிருந்தும் அதை காவிப்பரப்பும் நுளம்புகளில் இருந்தும் ஒழித்ததன் மூலமே மலேரியா அற்ற நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. எனவே காவிகள் பெருமளவாக காணப்படும் எமது பிரதேசத்தில் மலேரியா நோய்க்கான ஒட்டுண்ணியுடன் ஒருவர் இருந்தாலே அவ் இடத்தில் மலேரியா மீண்டும் விரைவாக பரவும் அபாயம் உள்ளது. எனவே மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

ஆபிரிக்க நாடுகள் மற்றும் இந்தியா செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ (தொ.பே.இல 021- 222 7924) தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இவர்கள் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் நாடுகளில் தங்கி இருக்கும் காலப்பகுதியில் வாரத்திற்கு ஒருமுறை மட்டும் தடுப்பு மருந்துகளை தொடர்ந்து உள்ளெடுப்பதோடு பயணம் நிறைவுற்று நாடு திரும்பிய பின்பும் நான்கு வாரங்கள் நிறைவுறும்வரை வாரத்திற்கு ஒருமுறை தடுப்பு மருந்துகளை தொடர்ந்து எடுக்கவேண்டும்.- என்றுள் ளது.

## புதிய ஆண்டில்...

மக்கள் சக்தியின் தலை வருமான சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத் துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்த அரசின் சர்வா திகார ஆட்சியால் நாட்டு மக்கள் இன்று வறுமை யின் பிடியில் சிக்கித் தவிர்க்கின்றனர். எத்தனையோ வலிகளையும், வேதனைகளையும், கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு புதிய ஆண்டில் மக்கள் காலடி எடுத்து வைக்கின்றனர்.

2022ஆம் ஆண்டு கொடுங்கோல் ஆட்சி நடத்தும் ராஜபக்ஷ குடும்ப அரசுக்கு முடிவு கட்டும் ஆண்டாக அமைய வேண்டும்.

இந்த அரசு ஆட்சியில் நீடித்தால் பட்டினியால் மக்கள் நாள்தோறும் செத்து மடியும் நிலைமை ஏற்படும். எனவே, இந்த அரசை இந்தப் புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே வீட்டுக்கு விரட்டியடிக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்” - என்றார். (இ)

## தமிழ், மலையக,...

பேசும் கட்சிகளை அண்மையில் ரெலோ ஒன்றிணைத்தது. அவை ஒன்றுகூடிப் பேசி கடிதத்தில் கையொப்பமிடத் தீர்மானித்த போதும் அது சாத்தியமாகவில்லை. முஸ்லிம் கட்சிகள் கையொப்பமிடப் பின்னடித்த நிலையில், இரா. சம்பந்தன் தலைமையில் நேற்று கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடிப் பிரச்னைகளை ஆராய்ந்தனர்.

இரா. சம்பந்தனின் இல்லத்தில் நேற்று சுமார் இரு மணி நேரத்துக்கும் மேலாக இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் எம். பி., செல்வம் அடைக்கலநாதன் எம். பி., சித்தார்த்தன் எம். பி., எம். ஏ. சுமந்திரன் எம். பி. ஆகியோரும், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன் எம். பி., சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது குறித்து இரா. சம்பந்தன் ஈழநாடுவுக்கு தகவல் அளிக்கையில், “தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகளின் ஒற்றுமை, அரசியல் தீர்வு, இந்தியப் பிரதமருக்கான புதிய ஆவணம் தொடர்பில் நாளையும் (இன்றும்) நாளை மறுதினமும் (நாளையும்) கூடிப் பேசவுள்ளோம். இந்த சந்திப்பில் ஆக்கபூர்வமான முடிவை நாம் எட்டுவோம்.”, - என்றார். (ஐ-இ)

## 41 ஒமைக்ரோன்...

ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர நேற்று தெரிவித்தார்.

ஸ்ரீஜெயவர்தனபுர பல் கலைக்கழக ஆய்வகத் தில் மேற்கொள்ளப்பட்ட மரபணு பரிசோதனையில் மேற்படி ஒமைக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட ஒமைக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.

எனவே, முடிந்தவரை மிக விரைவாக செயலூக்கித் தடுப்பூசிகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களை அவர் கோரியுள்ளார். (இ)

## உ.கிழங்கு, பெரிய...

அறிக்கை ஒன்றை வெளியிட்டு நிதி அமைச்சு இத னைக் குறிப்பிட்டுள்ளது.

சந்தையில் தற்போது அதிக விலையில் விற்பனை செய்யப்படும் உருளை கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியன இன்று முதல் குறைந்த விலையில் பெற் றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வடக்கு, கிழக்கு...

மாட்டார்கள்.”

- இவ்வாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகமோ அல்லது முஸ்லிம்களின் தாயகமோ அல்ல. இரு மாகாணங்களும் இலங்கை எனும் நாட்டுக்குள்ளேயே அமைந்துள்ளன. எனவே, மாகாணங்களைப் பிரித்து எந்த இனத்தவர்களும் சொந்தம் கொண்டாட முடியாது. அனைவரும் ஒரே நாட்டுப் பிள்ளைகள். சகலரும் இலங்கையர்கள் என்ற நாமத்துடன் இங்கு வாழ வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அன்று இணைந்திருந்தபடியால்தான் இனக்கலவரம் வெடிக்க ஆரம்பித்தது. வன்முறைகள் தாண்டமாடத் தொடங்கின.

இந்த இரு மாகாணங்களையும் முன்வைத்துத்தான் ‘தமிழீழம்’ என்ற கனவுடன் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஏந்திப் போராடினர். இதனால் நாடெங்கும் இரத்த ஆறு ஓடியது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டார்கள்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்தத் துன்பியல் நிகழ்வுகளைத் தமிழ்க் கட்சிகள் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்” - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu



## காலாவதியான பொருட்கள் அழிப்பு

கொழும்பு, ஜன. 01

பசறை நகரிலுள்ள வெதுப்பகங்கள், தேநீர் கடைகள், பல சரக்கு கடைகள் ஆகியனவற்றை பசறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பிரிவினர்கள் இணைந்து சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது காலாவதியான பாவனைக்கு உதவாத பொருட்களை கைப்பற்றி அந்தந்த கடைகளிலேயே மண்ணெண்ணெய் ஊற்றி அழிக்கப்பட்டதோடு, காலாவதியான லேபல்கள் ஒட்டப்படாத பொருட்களும் சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

கடை உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 05 . 1942



மறைவு 25 . 12 . 2021

### வைத்திலிங்கம் சின்னையா

யாழ்.புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுத்தீவு 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சின்னையா அவர்கள் 25.12.2021 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் – செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரநாதன் (ஈசன் -சுவிஸ்), லிங்கேஸ்வரநாதன்(லிங்கன் -நோர்வே), சிவனேஸ்வரநாதன்(சிவனேசன் -கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,நாகபூரணி, தயாளினி, சுபைதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, கிருஸ்ணபிள்ளை மற்றும் ஞானம்மா, குழந்தைவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவசங்கரன், கனகசூரி, பொன்னம்மா, தில்லைநாதன், சோமசுந்தரம், சின்னத்துரை மற்றும் கமலாதேவி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகம், சிவபாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும்,அனீஷ், அஜிந், சஞ்ஜீவன். சரண்யா, சாகரி, சாத்விகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 04.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் இன்பம் அந்தியகால சேவை மானிப்பாய்வீதி, கோம்பயன் மணல் மயானம் அருகாமை யாழ்ப்பாணத்தில் நடைப்பெற்று பின்னர் கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்திரன்**
**ஆஸ்பத்திரி வீதி – 19**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு:
**சிவனேசன் - மகன்**
Mobile : +14167105517

தகவல்:
**குடும்பத்தினர்.**



டான் தொலைக்காட்சியின் 21ஆவது ஆண்டு பூர்த்தி தினமான நேற்று இரவு இடம்பெற்ற கொண்டாட்ட நிகழ்வின்போது...

# இந்த அரசுக்கு எதிராக மக்கள் புரட்சி வெடிக்கும்

## நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 01

**“இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், உணவு பொருட்கள் தட்டுப்பாடு குறித்து அரசு குறிப்பிடும் கருத்து வெறுக்கத்தக்கதாக உள்ளன. காலையில் எந்தப் பொருளின் விலை மீண்டும் அதிகரிக்கப்படுமோ என்ற அச்சத்தில் நடுத்தர மக்கள் இரவு நித்திரைக்குச் செல்கிறார்கள். வெகுவிரைவில் பொதுமக்கள் வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகப் போராடுவார்கள்.”**

- இவ்வாறு நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“அத்தியாவசியப் பொருட்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானிப்பார்களாயின் அரசு எதற்கு? அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், உணவுத் தட்டுப்பாடு குறித்து வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிடும் கருத்துக்கள் வெறுக்கத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

சதொச விற்பனை நிலையத்தில் அனைத்து உணவுப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம் என அவர் குறிப்பிடுகின்றார். ஆனால், பொதுமக்கள் அதற்கு மாற்றீடாகக் கருத்துரைக்கின்றார்கள்.

சதொச விற்பனை நிலையங்க ளிலும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன செல்லும் சதொச விற்பனை நிலையங்களில் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி காட்சிப்படுத்தப்படுகின்றன.

அத்தியாவசிய



பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பொதுமக்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன பார்வையிடச் செல்லும் சதொச விற்பனை நிலையங்களுக்குச் செல்ல வேண்டும்.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளும், பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன.

தற்போது இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பால்மா உற்பத்தியிலான ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானிப்பார்களாயின் வர்த்தகத்துறை அமைச்சு, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய தரப்பினர் எதற்கு?

காலையில் எப்பொருளின் விலை அதிகரிக்கப்படும் என்ற அச்சத்தில் நடுத்தர மக்கள் இரவு நித்திரைக்குச் செல்கின்றார்கள்.

அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள தற்போது வரிசையில் காத்திருக்கும் மக்கள் வெகுவிரைவில் அரசுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள். நுகர்வோர் அதிகார சபை செயல்பாட்டில் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது” - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : அன்னாபாரதி-நகைசுவை பேச்சு
1.30 மணி : WEEK END MOVIE- சண்டைக்கோழி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : fun with கோபி - அழகுக்கலை நிகழ்சி

**இரவு**

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்-புதிய படைப்பு



10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு